DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX MLS

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1441 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 17, 2023

# இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு கோட்டாபய, மஹிந்த, பசில் ஆகிய மூன்று சகோதரர்கள் உள்ளிட்ட பலரும் பொறுப்பு என உயர் நீதிமன்றம் தீர்ப்பு



இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ச உள்ளிட்ட பலரே பொறுப்பு என இலங்கை உயர் நீதிமன்றம் கடந்த 14ம் திகதி செவ்வாய்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

மூன்று ராஜபக்ச சகோதரர்கள் மற்றும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் பேராசிரியர் டபிள்யூ.டி. லக்ஸ்மன், நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல, முன்னாள் ஜனாதிபதி செயலாளர் பி.பி. ஜயசுந்தர மற்றும் மத்திய வங்கியின் நாணய சபை உறுப்பினர்கள் ஆகியோர் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக உயர் நீதிமன்றம் மேலும் தெரிவித்துள்ளது.

(உள்ளே விபரமான செய்தி 6ம் பக்கத்தில்)

# இலங்கையில் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தொடர்ச்சியான துன்புறுத்தலை நிறுத்துமாறு சர்வதேச அழுத்தம்



இலங்கையில் பணியாற்றும் தமிழ் ஊடகவியலாளர்கள் அரச அடக்குமுறையில் இருந்து விடுபட்டும் அச்சமின்றியும் செயலாற்ற அனுமதிக்கப்பட வேண்டும் என, அமெரிக்காவின் நியூயோர்க் கை தளமாகக் கொண்டு செயல்படும் ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு அமைப்பு சி பி ஜே இலங்கை அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

அண்மையில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட இரண்டு தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான விசாரணைகளை உடனடியாக இலங்கை அரசு கைவிட வேண்டும் என்றும் மேற்படி சி பி ஜே அமைப்பு இலங்கை அரசிடம் கோரியுள்ளது.

(உள்ளே விபரமான செய்தி 6ம் பக்கத்தில்)

Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666 srinada21@gmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

BIG BILLYARD INSURANCE GROUP
Great Coverage. BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
5.0
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road , Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

value mobile

# GRAND OPENING SPECIAL
# NOVEMBER 18 - 20

EXCLUSIVE OFFER
FREE IPHONE 11
WITH ROGERS OR FIDO ACITVATION

EXCLUSIVE OFFER
FREE GOOGLE PIXEL
WITH ROGERS OR FIDO ACITVATION

GET ONE MONTH FREE - ASK US HOW!

FREE 6 MONTHS TV OFFER

OR

FREE $50 AMAZON/ERAA GIFT CARD

amazon GIFT CARD

OR

FREE WIRELESS EARPHONES

647-295-9299

SAMSUNG S23 FE 128GB
LEASE: $0/MTH
FINANCE: $5/MTH
OWN THIS PHONE FOR $120!!
ROGERS fido
ORIGINAL PRICE: $850

MASSIVE DEAL!
IPHONE 14 128GB
LEASE: $10/MTH
FINANCE: $22/MTH
OWN THIS PHONE FOR $528!!
ROGERS fido
ORIGINAL PRICE: $1027

TAMIL SPEAKING STAFF
தமிழ் பேசும் ஊழியர்கள்

IPHONE 15 128GB
LEASE: $22/MTH
FINANCE: $38/MTH
OWN THIS PHONE FOR $912!!
ROGERS fido
ORIGINAL PRICE: $1161

SAMSUNG S23 ULTRA 256GB
LEASE: $23/MTH
FINANCE: $50/MTH
ROGERS fido

MOTOROLA G PURE 32GB
FINANCE: $5/MTH
WITH PLAN: $34/MTH 6GB DATA
Freedom mobile

UNLOCKED
SAMSUNG A14 128GB
OWN IT: $199

SAMSUNG S23 128GB
LEASE: $10/MTH
FINANCE: $20/MTH
OWN THIS PHONE FOR $480!!
ROGERS fido
ORIGINAL PRICE: $1358

5928 Finch Ave East #101, Scarborough, ON M1B 5P8

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# அன்றிருந்தது போல எதுவுமே இன்றில்லை! அரசியலும் இதற்கு விதி விலக்கல்ல!

இவ்வார கதிரோட்டத்தை எழுதவென கைகள் விரல்களும் மனப் பதிவுகளும் சமாந்தரமாக எழுந்த போது அவை பாலஸ்த்தீனத்திற்காகவும் உலக அரசியலுக்காகவும் சில விடயங்களை பதிவு செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. ஆனால் 'அன்றிருந்தது போல எதுவுமே இன்றில்லை! அரசியலும் இதற்கு விதி விலக்கல்ல!' என்ற எமது இவ்வாரக் கதிரோட்டத்தின் தலைப்பு உலகத்திற்கோ அல்லது விடுதலைப் போராட்டங்களை நடத்தியவர்களுக்காக மாத்திரம் எழுதப்பட்டவையல்ல. தாங்கள் தலைமை தாங்கி நடத்திய 'மக்கள் போராட்டத்தில்' வெற்றி கண்டு. பின்னர் ஆட்சி பீடத்தில் ஏறி அமர்ந்திருந்து புரட்சிகரமான தலைவர்களாக விளங்கிய சிலருக்காக மாத்திரம் எழுதப்பட்டவையும் அல்ல.!

ஆனால் புரட்சிகர போராட்டங்களை தலைமை தாங்கி நடத்திய புரட்சியாளர்களை கொன்றொழிப்பதிலேயே கவனத்தோடு செயற்பட்டு சர்வதேசப் பயங்கரவாதிகளாக விளங்கும் பல நாடுகளின் தலைவர்களுக்காகவும் எழுதப்பட்ட ஒரு கவனக் குறிப்பு இதுவென்றே நாம் கருதுகின்றோம்.

ஆமாம்! 'அன்றிருந்தது போல எதுவுமே இன்றில்லை! அரசியலும் இதற்கு விதி விலக்கல்ல! என்றாகி விட்டது உலகின் நடப்புக்கள். ஆட்சி அதிகாரத்தை தம் கைகளில் வைத்துக் கொண்டு சில நாடுகளை தங்களோடு இணைத்துக் கொண்டு அநீதிக்கு எதிராக குரல் கொடுப்பவர்களை நசுக்குவதும் தேவையானால் சுட்டுத் தள்ளிவிடுவதுமான அரச பயங்கரவாதச் செயல்கள் இடம்பெறும் இந்நாட்களில் பாலஸ்தீனத்தை குறி வைத்து இத்தனை வருடங்கள் இஸ்ரேஸ் என்னும் அரச பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல்கள் அழித்த பாலஸ்த்தீனியர்களின் உடமைகள் சொத்துக்கள் உயிர்கள் என எத்தனை இலட்சங்கள்?.

உலக நாடுகள் இன்றிருப்பதைப்போல அன்றிருக்கவில்லை குறிப்பாக 1940-களின் பிற்பகுதியில் 2-ஆம் உலகப் போர் முடிந்த நிலையில் பெரும்பாலான நாடுகள் 'விடுதலை' சுவாசத்திற்கு ஏங்கிக் கொண்டிருந்த பருவம் அது அரசியல் மற்றும் சமூக விடுதலைக்காக புரட்சியாளர்களாக போராட்டங்களை நடத்திய புரட்சித் தலைவர்களான சே குவாரா, ஃபிடல் காஸ்ட்ரோ, யாசர் அராபாத் போன்ற இளம் தலைவர்கள் உலக

அளவில் இளைய சமூகத்தினரால் கொண்டாடப்பட்டனர். அவர்களின் வழியில் பின்னாளில் வந்தவர் தான் எமது மண்ணின் புரட்சியாளர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள். ஆனால் அந்நாளில் புரட்சியாளர் கொண்டாடப்பட்டது போன்று தற்போது இல்லை. புரட்சியாளர்களாக விளங்கும் தலைவர்களை கொன்றழிப்பது என்புத. தமக்குளளேயே் சண்டையிட்டுக் கொள்ளும் நாடுகளின் தலைவர்கள் கைகோர்த்துக்

கொண்டு நின்றே எமது தமிழீழ விடுதலைப் போராட்டம் என்னும் எழுச்சியை வீழத்தியும் எண்ணற்ற தவைர்களையும் போராளிகளையும் கொன்றழித்தும், தங்களுக்குள் கொக்கரித்துக் கொண்டவர்கள்

யாசர் அராஃபாத்தின் புகழ்பெற்ற வாசகம்: "என்னுடை ஒரு கையில் ஒலிவ் மரக் கிளையையும் இன்னொரு கையில் விடுதலைப் போராளிக்கான துப்பாக்கியையும் ஏந்தி இருக்கிறேன் எந்த நிலையிலும் ஒலிவ் இலைக் கொத்து என் கையைவிட்டு நழுவும்படி செய்துவிடாதீர்கள்".)

பாலஸ்தீன தேசத்தையும் யாசர் அராஃபாத்தையும் அரபு மண்டலத்தைக் கடந்து முதன்முதலில் ஆதரித்த முதல் உலகத் தலைவர் இந்திரா காந்திதான். அத்தகைய இந்திரா காந்தியை, ஒரு கட்சியின்-நாட்டின்

தலைவர், உலகத் தலைவர்களில் ஒருவர் என்னும் நிலையைக் கடந்து தன் சொந்த சகோதரியைப் போலக் கருதினார் யாசர். ஆனால் தற்கால உலகத் தலைவர்கள் அவ்வாறு இல்லை. எனவே தான் தற்போதைய நாட்களில் பால்த்தீனம் என்னும் சிறிய நாடு சின்னாப்பின்னமாகிக் கிடக்கின்றது. பாலஸ்த்தீனத்திற்கு ஆதரவு வழங்க வேண்டிய அரபு நாடுகளே இஸ்ரேல் என்னும் அரச பயங்கரவாத தேசத்திற்கு ஆதரவுக் கரம் நீட்டுகின்றன.

இன்னும் ஒருபடி மேலாகக் குறிப்பிட வேண்டுமென்றால், அண்ணல் மகாத்மா காந்தி, ஆசிய சோதி-அரசியல் அமைதிப் புறா பண்டித ஜவஹர்லால் நேரு ஆகிய பெருந்தலைவர்கள்கூட பாலஸ்தீனத்தை ஆதரித்தனர். உலக மக்களைப் போல பாலஸ்தீன மக்களும் தங்களை ஆகிரமித்துள்ளவர்களிடம் இருந்து விடுபட்டு விடுதலை தாகத்தை தணித்துக்கொள்ள உரிமை பெற்றவர்கள் என்று சொல்லி, ஆதிக்க அரசியலுக்கு முடிவுகாண விரும்பினார்கள் அந்தத் தலைவர்கள். ஆனால் உலகம் இன்றிருப்பதைப் போல அன்றிருக்க வில்லை. எனவே இந்த அநியாயங்களைக் நாம் கண்களால் பார்க்கின்றோம். காதுகளால் கேட்கின்றோம். வாய்களை மட்டும் மூடி வைத்துக்கொண்டுள்ளோம்.!

Canada — We acknowledge the financial support of the Government of Canada

# பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபாவின் 98வது ஜனன தினம் கனடாவிலும் கொண்டாடப்படவுள்ளது

## கனடாவாழ் சாயி அன்பர்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்களுக்கும் மனித நேய உதவிகளை வழங்கி வருகின்றார்கள்





பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபாவின் 98வது பிறந்த தினம் வெகு விமரிசையாக உலகம் எங்கும் நவம்பர் மாதம் 23ம் திகதி வியாழக்கிழமை கொண்டாடப்படுகின்றது. கனடா ஸ்காபுரோவில் அமைந்துள்ள சத்திய சாயிபாபா நிலையத்திலும் காலை 5.00 மணி முதல் 7.00 மணி வரையும் மாலை 6.00 மணி முதல் 8.30 மணி வரையும் விசேட நிகழ்ச்சிகள் நடைபெறும்.

பகவானின் போதனைகளில் அவருடைய பக்தர்களுக்கான ஒன்பது அம்ச ஒழுக்கக் கட்டுப்பாடு முக்கியமானது அவையாவன.

- தினசரி தனது மதவழக்கப்படி வழிபாடு தியானம் செய்தல் வேண்டும்
- வாரம் ஒரு தடவை குடும்பத்தினருடன் பஜனை செய்தல் வேண்டும்
- சாயி குடும்பத்தின் பிள்ளைகள் ஆன்மீகக் கல்வியில் ஈடுபடுதல் வேண்டும்.
- சாயி நிலையங்களால் ஒழுங்குபடுத்தும் சமூக சேவைகளிலும் மற்றும் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளல் வேண்டும்.
- மாதத்தில் ஒரு தடவையாவது சாயி நிலையத்தில் கூட்டு வழிபாடு பஜனையில் ஈடுபடுதல் வேண்டும்.
- சாயி பற்றிய இலக்கியங்களையும் மற்றைய சமய இலக்கியங்களையும் ஞானிகளின் வாழ்கையும் பற்றி கற்றல் வேண்டும்.
- எல்லோருடனும் அன்பாகவும் இனிமையாகவும் பேசுதல் வேண்டும்

மற்றவர்களைப் பற்றிப் புறம் பேசுதல் தவிர்த்தல் வேண்டும் (அதுவும் அவர்கள் இல்லாத இடத்தில்)

- தேவையற்ற செலவுகளைக் குறைத்து அவற்றை சேமித்து மனித சமுதாயத்துக்கு பிரயோசனபடுத்துதல் வேண்டும்.

ஸ்காபுரோ சத்திய சாயி பாபா நிலையம் ஆரம்க்கபட்டு 36 வருடங்கள் கடந்த நிலையில் 2011ம் ஆண்டு தனக்கான ஒரு இடத்தை நிறுவி தனது பணிகளைச் சுவாமியின் கட்டளைப்படி நடாத்தி வருகின்றது.

இங்கு கிட்டத்தட்ட 600 மாணவர்கள் சத்திய சாயி கல்வியில் 5 வயது முதல் 17 வயது வரை கல்வி கற்று வருகின்றனர். இக்கல்வியில் பயின்ற பிள்ளைகள் தற்போது நல்ல ஒழுக்க சிலர்களானவும் உயர்தொழில்களில் ஈடுபட்டு வரும்

வேளையில் அடுத்த சந்ததியினருக்கு தாம் கற்றவற்றை போதித்தும் வருகின்றார்கள். ஆரம்பத்தில் கல்வி பயின்றவர்கள் தற்போது தமது குழந்தைகளை இக்கல்வியில் சேர்த்திருப்பது அவர்கள் எவ்வளவு தூரம் இக்கல்வியில் பயன் பெற்றார்கள் என்பதற்கு சான்றாகும். சாயி நிலையத்தில் சகல வசதிகளும் கொண்ட நூல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

சாயி பஜனைகள் வியாழக்கிழமை, ஞாயிற்றுக் கிழமைகளில் தவறாது இடம் பெற்று வருகின்றன. ஒவ்வொரு சனிக்கிழமையும் உணவு வழங்கும் சேவை (நாராயண சேவை) ஒவ்வொரு இடங்களிலும் வசதி குறைந்தோருக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

சுவாமியில் 100வது பிறந்த தினம் 2025ம் ஆண்டு வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட இருக்கின்றது. இதற்கு முன்னோடியாக 95வது பிறந்த தினத்தில் இருந்தே நிகழ்ச்சிகள் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு பக்தர்கள் எல்லா நாடுகளிலும் இருந்து புட்டபர்த்தி வந்து கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறாக சுவாமியின் **"Ceiling on Desire"** - ஆசைகளைக் குறைத்து மற்றவர்களுக்கு உதவி செய்தல்.என்னும் திட்டத்தின் கீழ் கனடாவாழ் சாயி அன்பர்கள் கோவிட் ஆரம்ப காலத்தில் இருந்து தாயகத்தில் உள்ள எமது உறவுகளுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்கி வருகின்றார்கள். கூடுதலாக போரால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்களுக்கு வழங்கி வருகின்றார்கள். 2021ம் ஆண்டு சுவாமியில் 96 வது பிறந்த தின நிகழ்வின் போதும் 2022ம் ஆண்டு 97வது பிறந்த தின நிகழ்வின் போதும் 1000 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

(அரிசி, பருப்பு, சினி, சோப்) போன்றவற்றை வழங்கியுள்ளார்கள். இதில் முல்லைத்தீவு தண்ணியூற்று சாயி நிலையம் பெரும் பங்கை வகிப்பதோடு கிழக்கு மற்றும் மலையக் சாயி நிலையங்களும் இணைந்து உதவி செய்கின்றன. 2022ம் ஆண்டு 23,000 டொலர் பெறுமதியான பணம் சேகரிக்கப்பட்டு (கிட்டத்தட்ட 62 இலட்சம் ரூபாய்கள்) 1000 குடும்பங்களுக்கு உலர் உணவ வழங்கப்பட்டதோடு 30 இலட்சம் ரூபா செலவில் புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள 5 பிள்ளைகள் கொண்ட விதவைத்தாய்க்கு ஒரு வீடும் கட்டிக் கொடுக்கப்பட்டது.

இவ்வருடமும் இதுபோன்று முல்லைத்தீவு தண்ணியூற்று, கிழக்கு மாகாணத்தில் சமுத்திரபுரம் எருகில், வினாயகபுரம் போன்ற பகுதிகளில் வாழும் வலுவிழந்தோருக்கும் முதியோருக்கும் மலையகத்தில் கற்றன், நாவலப்பிட்டி, வெலிக்கந்த தோட்டத் தொழிலாளர்களுக்கும் இம்முறை அரிசி, மாவு, சீனி தேயிலை போன்ற உலர் உணவுப் பொருட்கள், 1000 க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு இப்பகுதியில் உள்ள சாயி நிலையங்கள் மூலம் வழங்கப்பட்டு உள்ளன.

பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபவினால் ஆரம்பிக்கப்பட்ட டுநைரனை டுழளந அதாவது இரத்ததானம் மூகாம் எமது சாயி அன்பர்களால் கடந்த 25 வருடங்களாக நாடாத்தப்பட்டு வருகின்றுத 5321 குலைஉா யுளந அமைந்துள்ள எமது

சாயிநிலையம் 2011 ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட பின்னர் வருடத்தில் இரண்டு தடவைகள் சித்திரை, புரட்டாதி மாதங்களில் 100 மேற்பட்ட அன்பர்களால் ஒரே நாளில் இரத்ததானம் செய்யப்பட்டு வருகிறது.

சாயி அன்பர்கள் அனைவரும் இந்நிலையத்தில் வாரந்தோறும் நடைபெறும் சாயி பஜனைகளில் கலந்து பயன் பெறுங்கள்.

**பெண் சமையல் உதவியாளர் தேவை**

ஸ்காபுறோவில் உள்ள வீடொன்றில் சிறு குடும்பம் ஒன்றுக்கு பெண் சமையல் உதவியாளராக பணியாற்ற ஒருவர் உடனடியாகத் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம். மேலதிக விபரங்களுக்கு

பாலா மாஸ்டர்:- 416 416 8425

**வீடு வாடகைக்கு House for Rent**

ஸ்காபுறோ நகரில் **Midland/Steeles** சந்திப்புக்கு அருகில் உள்ள 3 **bedrooms/2full washrooms/separate entrance with 1 room.** ஆகியன கொண்ட வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு. **More convenient area. TTC, YRT, Go station schools** மற்றும் தமிழர் கடைகள் ஆகியன நடந்து செல்லும் தூரத்தில் உள்ளன

**Contact : 647-994-6158**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# உலகத்தில் இடம்பெற்று வருகின்ற யுத்தங்கள் எல்லாம் முடிவுக்கு வந்து மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு இந்த நாள் அமைய வேண்டும் – மஹா தர்மகுமார குருக்கள்

(11-11-2023)

தீபாவளி திருநாளில் உலகத்தில் இடம்பெற்று வருகின்ற யுத்தங்கள் எல்லாம் முடிவுக்கு வந்து மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் வாழ்வதற்கும், எல்லா மதங்களையும் மனித நேயத்துடன் மனிதர்கள் மதித்து வாழ்வதற்கும் ஒரு முன்னுதாரணமாக இந்த நாள் அமைய வேண்டும் என மன்னார் மாவட்ட இந்து மத பீடத்தின் தலைவர் செந்தமிழ் அருவி கலாநிதி சிவசிறி மஹா தர்மகுமார குருக்கள் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள தீபத் திருநாள் வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடுகையில், உலகம் முழுவதும் வாழ்ந்து கொண்டு இருக்கின்ற இந்து மக்கள் இனிய தீபாவளி நாளாக கொண்டாடி வருகின்றனர். இந்த தீபாவளி திருநாள் என்பது நரகாசுரன் கிருஸ்ன பரமாத்பநாலே அழிக்கப்பட்ட ஒரு நாளாக நினைவு கூறப்படுகிறது.

நரகாசுரன் என்பது அசுரன் மட்டுமல்ல எங்களுக்குள்ளே இருக்கக்கூடிய அசுரனை நாங்கள் ஒவ்வொருவரும் வதம் செய்ய வேண்டும் என்ற நோக்கிலே இருள்கள் அகன்று ஒளியேற்றி கொண்டாடப்படுகின்ற ஒரு உண்ணதமான பண்டிகையாக இந்து மக்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது.



தீபாவளி என்பதன் பொருள் தீபங்களை வரிசையாக ஏற்றி வழிபடுதல் என்பதாகும்.

எனவே தீபாவளி திருநாளில் உலகத்தில் இடம்பெற்று வருகின்ற யுத்தங்கள் எல்லாம் முடிவுக்கு வந்து மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் வாழ்வதற்கும், எல்லா மதங்களையும் மனித நேயத்துடன் மனிதர்கள் மதித்து வாழ்வதற்கும் ஒரு முன்னுதாரணமாக இந்த நாள் அமைய வேண்டும்.

இதற்கு எல்லாம் வல்ல இறைவனுடைய அனுகிரகங்கள் கிடைக்க வேண்டும் என்பதோடு, அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். என தெரிவித்தார்.

# தீபாவளி தினத்தை முன்னிட்டு இன மத ஐக்கியத்திற்கான பூஜை வழிபாடுகள்!



இன மத ஐக்கியத்திற்கான பூஜை வழிபாடு ஞாயிற்றுக்கிழமை தீபாவளி தினத்தன்று நல்லூர் சிவன் ஆலயத்தில் சிறப்பாக இடம் பெற்றது.

தேசிய இன நல்லிணக்கத்துக்கான அதிகார சபையின் தலைவர் கந்தையா கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இன மத ஐக்கியதுக்கான பொங்கல் இடம்பெற்றதுடன் விசேட யாகம் வளர்க்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் ஜெயசீலன், தொழிலதிபர் இ.எஸ்.பி. நாகரத்தினம், யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் வேல் நம்பி, யாழ்ப்பாண பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் பிரதேச பொலிஸ் நிலையங்களின் பொறுப்பு அதிகாரிகள் இராணுவ உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் நாயன்மார்க்கட்டு எஸ் ஓ.எஸ்.கிராம பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. அத்துடன் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.





# பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தனிப்பட்ட நிதியில் ஆனைக்கோட்டை சித்திவிநாயகர் விளையாட்டுக் கழகத்திற்கு முதலுதவிச் சிகிச்சைப் பெட்டி மற்றும் வீரர்களுக்கான மருத்துவ உபகரணங்களும் வழங்கப்பட்டன





மானிப்பாய் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சி. மரியறோசறி (செல்வி) அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் அவர்களின் தனிப்பட்ட நிதிப் பங்களிப்பில் ஆனைக்கோட்டை சித்திவிநாயகர் விளையாட்டுக் கழகம் மற்றும் இளைஞர் கழகம் என்பனவற்றிற்கு முதலுதவிச் சிகிச்சைப் பெட்டி மற்றும் விளையாட்டு வீரர்களுக்கான மருத்துவ உபகரணங்களும் தீபாவளி தினத்தில் வழங்கி வைக்கப்பட்டன.

# கிழக்கு மாகாணத்தில் அத்துமீறி விவசாயத்தில் ஈடுபடும் 13 சிங்கள மக்களை காணியை விட்டு வெளியேறுமாறு நீதிமன்றம் உத்தரவு



(13-11-2023)

கிழக்கு மாகாணத்தில் கறவை மாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட காணியில் அத்துமீறி விவசாயத்தில் ஈடுபடும் 13 சிங்கள மக்களை காணியை விட்டு வெளியேறுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வெளியாட்கள் சிலர் தாற்காலிக வீடுகளை அமைத்து விவசாயம் செய்து வருவதாக மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினால் இந்த வருடம் செப்டெம்பர் 22ஆம் திகதி தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பை நவம்பர் 13ஆம் திகதி அறிவித்து ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மட்டக்களப்பு, மயிலத்தமடு, மாதவணை ஆகிய பிரதேசங்களில் புல்வெளிகளை பலவந்தமாக ஆக்கிரமித்துள்ள சிங்கள விவசாயிகளை அங்கிருந்து அகற்ற கோரி தமிழ் பால் பண்ணையாளர்கள் மட்டக்களப்பு சித்தாண்டி பாடசாலைக்கு முன்பாக ஆரம்பித்த போராட்டம் இன்று 60வது நாளாகவும் தொடர்கிறது.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நவம்பர் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, காணியின் உரிமையை உறுதிப்படுத்தும் சட்ட ஆவணங்கள் இருப்பின் அவற்றை, நவம்பர் 13 ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிபதி இந்த 13 பேருக்கும் உத்தரவிட்டுள்ளார்.

காணியின் உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் அரச அதிகாரியால் வழங்கப்பட்ட ஆவணங்களை சிங்கள விவசாயிகளால் நவம்பர் 13ஆம் திகதி நீதிமன்றில் முன்வைக்க முடியாமல் போனதால், காணியை விட்டு வெளியேறுமாறு நீதவான் அன்வர் சதாத் உத்தரவிட்டுள்ளார்.



மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் சார்பில் அரச சட்டத்தரணி டில்கா டி சில்வா நீதிமன்றத்தில் முன்னிலையாகினர்.

மாடுகள் மேய்ந்த நிலத்தில் பாதியை சிங்கள விவசாயிகள் கையகப்படுத்தி உள்ளதாகவும், அதனால் பால் பண்ணையாளர்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பால் பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மட்டக்களப்பு, மயிலத்தமடு மாதவணை பிரதேசத்தில் அமைந்துள்ள மேயச்சல் தரையில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்வினால் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட அனுராதா யஹம்பத் தினால் 150 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டனர். இந்த குடும்பங்கள் சோளம் உள்ளிட்ட பயிர்களை பயிரிடுவதற்கு நியமிக்கப்பட்டுள்ள நிலையில், பாரம்பரிய கறவை மாடுகளின் உரிமையாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையில் கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுத்தப்பட்ட 6,000 ஏக்கர் மேய்ச்சல் நிலத்தில், சிங்கள விவசாயிகள் 2,500 ஏக்கர் நிலப்பரப்பை வலுக்கட்டாயமாக ஆக்கிரமித்து விவசாயத்தில் ஈடுபடுவதாக பால் பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஜனாதிபதி அண்மையில் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது, தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்ட பால் விவசாயிகள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

ஜனாதிபதியின் கிழக்கு விஜயத்தின் போது அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த பௌத்த பிக்கு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட நாற்பது பேருக்கு எதிராக பொலிஸார் ஏற்கனவே நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளதுடன், குற்றம் சாட்டப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள்.

பால் பண்ணை பிரச்சினைக்கு தீர்வு காண்பது தொடர்பாக தமிழ் மக்கள் பிரதிநிதிகள் கடந்த ஒக்டோபர் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியுடன் நடத்திய கலந்துரையாடலின் போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பொலிஸாருக்கும் மகாவலி அதிகாரசபை அதிகாரிகளுக்கும், பால் பண்ணையாளர்களின் நிலத்தை அபகரித்து விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களை வெளியேற்ற சட்ட ரீதியில் நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்திருந்தார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னார் முசலியில் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக ஒன்று திரண்ட மக்கள்

**- மன்னார் நிருபர் (10.11.2023)**

பாலஸ்தீனம் மற்றும் ஹாசா பகுதிகளில் இஸ்ரேல் படைகளினால் அப்பாவி பெண்கள் சிறுவர்கள் கொன்று குவிக்க படுவதற்கு எதிராகவும் இஸ்ரவேல் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் இனவழிப்புக்கு எதிராகவும் வெள்ளிக்கிழமை (10-11-2023) மதியம் 1.30 மணியளவில் சிலாவத்துறை சுற்றுவட்ட பகுதியில் ஒன்று கூடிய முஸ்லிம் மக்களால் அடையாள கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அப்பாவி பொதுமக்கள் மீது நடத்தப்படும் கொடூர யுத்தத்திற்கு எதிராக மௌனமாக இருக்கும் முஸ்லிம் நாடுகள் தங்கள் மௌனத்தை களைந்து ஆதரவு தெரிவிக்க வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் சபையில் அதிக பெரும்பான்மையோடு நிறைவேற்றப்பட்ட இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானத்தை





நடைமுறைப்படுத்த கோரியும் யுத்தத்தை உடனடியாக நிறுத்தி சமாதானத்தை நிலை நாட்டுமாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.




முஸ்லிம்கள் மீதான அடக்குமுறை இல்லாமல் ஆக்கு, பாசிச இஸ்ரேலின் அடக்குமுறையை கண்டிப்போம், சர்வதேசமே மனித படுகொலையை நிறுத்த சொல், பாலஸ்தீன மக்களை நிம்மதியாக வாழ விடு, போர் குற்றம் புரியும் இஸ்ரேல் உன் போர் குற்றங்களை நிறுத்து போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முசலி பகுதியை சேர்ந்த பல நூற்றுக்கணக்கான ஆண்கள், பெண்கள் சிறுவர்கள் இணைந்து குறித்த போராட்டத்தில் ஈடுபட்டதுடன் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இஸ்ரேலுடனான அனைத்து இராஜதந்திர உறவுகளையும் நிறுத்த வேண்டும் எனவும் இலங்கைக்கான இஸ்ரேலிய தூதரை திருப்பி அனுப்ப வேண்டும் என்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்குமாறு கோரி முசலி பிரதேச செயலாளரிடம் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மீனவர்கள் அத்துமீறல் தொடர்கிறது கடற் படையை கடலில் காணவில்லை: மயிலிட்டி சங்கத் தலைவர் — குணராஜன் தெரிவிப்பு



வடக்கு கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கை தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் கடற் படையைக் கடலில் காணவில்லை என மயிலிட்டி கடற்தொழிலாளர் சங்கத்தின் தலைவர் குணராஜன் தெரிவித்தார்.

10-11-2023 அன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு முன்னால் இடம் பெற்ற இந்திய கடற்தொழிலாளர்களின் வடக்கு கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடியை கட்டுப்படுத்துமாறு கோரி இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய அத்துமீறிய கடத்தொழிலாளர்களின் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருகிறது.



கடந்த வாரம் பருத்தித்துறை சக்கோட்டைப் பகுதியில் இந்தியா அத்துமீறிய இழுவைப் படகுகள் சாதாரணமாக எமது கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் இலங்கை கடற்படையை கடற்பகுதியில் காணவில்லை.

எமது கடல் வளங்கள் தொடர்ச்சியாக சூறையாடப்பட்டு வரும் நிலையில் வெளிநாடுகளில் இருந்து மீன இறக்குமதி இடம் பெறுகின்றது.

இந்தியா அத்துமீறிய படகுகளினால் எமது மீனவர்களின் தொழில்கள் அழிக்கப்பட்டுவரும் நிலையில் பிடிக்கப்படும் மீன்களைக் கூட உரிய விலையில் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே கடற்தொழில் அமைச்சர் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடனடியாக தலையீடு செய்து எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கையில் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான துன் புறுத்தலை நிறுத்துமாறு சர்வதேச அழுத்தம்



(13-11-2023)

இலங்கையில் பணியாற்றும் தமிழ் ஊடகவியலாளர்கள் அரச அடக்குமுறையில் இருந்து விடுபட்டும் அச்சமின்றியும் செயலாற்ற அனுமதிக்கப்பட வேண்டும் என, அமெரிக்காவின் நியூயோர்க் கை தளமாகக் கொண்டு செயல்படும் ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு அமைப்பு சி பி ஜே (CPJ) அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட இரண்டு தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான விசாரணைகளை உடனடியாக இலங்கை அரசு கைவிட வேண்டும் என்று சி பி ஜே கோரியுள்ளது.

“இலங்கை அதிகாரிகள் உடனடியாக தமிழ் ஊடகவியலாளர்களான சசிகரன் புண்ணியமூர்த்தி மற்றும் பாலசிங்கம் கிருஷ்ணகுமார் ஆகியோர் மீதான அனைத்து அடக்கு முறைகளையும் கைவிட்டு, அவர்கள் சுதந்திரமாக செய்தி சேகரிப்பில் ஈடுபடுவதை உறுதி செய்ய வேண்டும்” என சி பி ஜே அமைப்பின் ஆசிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஒருங்கிணைப்பாளர் பெஹ் லி யீ தெரிவித்துள்ளார். “மனித உரிமைகள் விடயங்கள் தொடர்பிலும் அது மீறப்படும் போது தமது சமூகத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பிலும் செய்திகளை சேகரித்து வெளியிட்டு வரும் தமிழ் செய்தியாளர்களை இலக்கு வைத்து தொடர்ச்சியாக துன்புறுத்தும் அரசின் நீண்டகால நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்” என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பிலுள்ள சசிகரன் புண்ணியமூர்த்தி மற்றும் பாலசிங்கம் கிருஷ்ணகுமார் ஆகியோரின் வீடுகளுக்குச் சென்ற பொஸார் அவர்களைத் தனித் தனியாக விசாரித்துள்ளனர். கடந்த ஒக்டோபர் மாதம் 8ஆம் திகதி இடம்பெற்ற போராட்டம் ஒன்று தொடர்பில் செய்தி சேகரித்து வெளியிட்டமை தொடர்பாக அவர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டதாக, செயற்பாட்டுக் குழுவான ஜே டி எஸ் (JDS) அமைப்பை மேற்கோள் காட்டி சி பி ஜே தெரிவித்துள்ளது.

இந்த இரு சுயாதீன ஊடகவியலாளர்களும் மைலத்தமடு, மாதவணைப் பகுதியில் மேய்ச்சல் நிலங்களை அரச ஆதரவுடன் வலிந்து ஆக்கிரமித்துள்ள சிங்கள மக்களால் தமது வாழ்வாதாரங்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது எனக் கூறி கால்நடை விவசாயிகள் முன்னெடுத்த போரட்டம் குறித்து செய்தி சேகரிக்கச் சென்றிருந்தனர். அவர்களின் போராட்டாம் இப்போது இரண்டு மாதங்களுக்கும் மேலாகத் தொடர்கிறது.

சசிகரன் மற்றும் கிருஷ்ணகுமார் ஆகியோர் அந்த போராட்டங்களின் போது செய்தி சேகரிக்கச் சென்ற அதேநாளில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்திருந்தார். அந்த இரு நிகழ்வுகள் குறித்த செய்திகளை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகங்களுக்கு அளிப்பதற்காக அந்த இருவரும் அந்த இடங்களுக்குச் சென்றிருந்தனர். இந்நிலையில், அவர்களது வீடுகளுக்குச் சென்ற பொலிஸ் அதிகாரி அவர்களின் தனிப்பட்ட மற்றும் ஊகத்துறையின் பின்புலம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டு அந்த போராட்டத்தில் என்ன நடந்தது என்பது குறித்து விசாரணைகளை நடத்தியுள்ளார் என்கிறது சி பி ஜே அமைப்பு.

விசாரணையின் முடிவில் அவர்கள் தெரிவித்த விடயங்களை வாக்குமூலமாக எழுதி அதில் கையெழுத்திடுமாறு அந்த பொலிஸ் அதிகாரி வலியுறுத்தியுள்ளார். மேலும், அவர்கள் இருவரும் கால்நடை விவசாயிகள், அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள் ஆகியோருடன் அந்த போராட்டம் தொடர்பிலான குற்ற விசாரணையில் அவர்களுடன் பெயரிடப்பட்டுள்ளனர் என்று கூறி, இருவரும் நவம்பர் மாதம் 17ஆம் திகதி ஏறாவூர் நீதவான் நீதிமன்றத்தில் பிரசன்னமாக வேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

எனினும், சசிகரன் மற்றும் கிருஷ்ணகுமாருக்கு எழுத்துமூலமான அழைப்பாணையோ அல்லது அவர்கள் மீதான குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்த பொலிஸ் அறிக்கையோ அளிக்கப்படவில்லை என்று சி பி ஜே கூறியுள்ளது.

இலங்கையில் 2009ஆம் ஆண்டு போர் முடிவிற்கு வந்தாலும் பெரும்பான்மை சிங்கள மற்றும் சிறுபான்மை தமிழ் மக்களிடையே இன முரண்பாடுகள் தொடர்வதாக தனது அறிக்கையில் சி பி ஜே சுட்டிக்காட்டியுள்ளது.

“நாட்டில் தமிழர்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதை எதிர்கொள்கின்றனர்”.

கடந்த நவம்பர் 4ஆம் திகதி அன்று அந்த இரு ஊடகவியலாளர்களும் பௌத்த பிக்கு ஒருவரின் “தமிழர்களை துண்டு துண்டாக வெட்டுவேன் என்று அச்சுறுத்தும் காணொளி தொடர்பில் தம்மிடம் இருக்கும் “மூலாதார காணொளிகளை” தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்று நீதிமன்றம் ஒன்று கட்டளையிட்டிருந்தது. மேலும் அந்த பிக்குவின் நடவடிக்கைகள் குறித்து சுயாதீனமாக அந்த செய்தியாளர்கள் முன்னெடுத்த புலன் விசாரணை குறித்து தனியாக ஒரு வாக்குமூலத்தை அளிக்க வேண்டுமெனவும் பொலிஸார் உத்தரவிட்டுள்ளதாக அறிய முடிகிறது.

இதையடுத்து நவம்பர் மாதம் 7ஆம் திகதி, சசிகரன் மற்றும் கிருஷ்ணகுமார் ஆகியோர், மட்டக்களப்பிலுள்ள பிரதேச குற்றப் புலனாய்வு அலுவலகத்திற்குச் சென்று தம்மிடமிருந்து காணொளி ஆதாரங்களை பொலிஸாரிடம் அளித்தனர். பின்னர் பொலிஸார் அவர்களிடம் ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாக விசாரணையை முன்னெடுத்தனர். அதில் அவர்களின் செய்தி சேகரிப்பு மற்றும் எந்தெந்த ஊடகங்களுடன் அந்த காணொளியை பகிர்ந்து கொண்டார்கள் போன்றா கேள்விகள் கேட்கப்பட்டன என தனது அறிக்கையில் கூறியுள்ள சி பி ஜே, அவர்கள் மீதான விசாரணைகளை உடனடியாக அரசு கைவிட வேண்டும் எனவும் கோரியுள்ளது. சசிகரன் மற்றும் கிரு‘ணகுமார் இருவரும், அண்மைய இந்த சம்பவமானது, கால்நடை விவசாயிகள் மற்றும் சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் மக்கள் குறித்த செய்திகளை தாங்கள் வெளியிடாதவாறு நசுக்கும் நடவடிக்கையின் மற்றொரு வடிவமே என சி பி ஜேயிடம் கூறியுள்ளனர்.

இந்த விடயங்கள் தொடர்பில், சி பி ஜே பொலிஸார் தரப்பு கருத்துக்களைப் பெற முயன்ற போதும் அது கிடைக்கப்பெறவில்லை என தெரிவித்துள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் 22 அன்று, அரச ஆதரவில் மட்டக்களப்பில் நில ஆக்கிரமிப்பில் பெரும்பான்மையின மக்கள் ஈடுபடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்தபோது, அது தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற போது சுமார் 50 சிங்கள மக்கள் அவர்களை சூழ்ந்து கொண்டு அவர்களை தடுத்து நிறுத்தி பிடித்து வைத்திருந்தனர் என சி பி ஜே அறிக்கை கூறுகிறது.

“இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகத்திற்குரிய நபர்கள் யாரும் நவம்பர் 8 ஆம் திகதி வரை விசாரிக்கப்படவில்லை” என்று கிருஷ்ணகுமார் சி பி ஜேவிடம் கூறியுள்ளார்.

இதேவேளை நவம்பர் மாதம் 9ஆம் திகதி அங்குள்ள கால்நடை விவசாயிகளை நேரில் சந்தித்து நிலப்பிரச்சினை தொடர்பாக அவர்களுடன் உரையாடுவதற்காக சென்ற ஊடகவியலாளர்கள் குழு ஒன்று காலை 10 மணி அளவில் மயிலத்தமடுவில் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டதாக, ஊடகவியலாளர் குழு ஒன்று பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளனர். எனினும் வேறு சிலர் அங்கு செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர் எனவும் அவர்களது கடிதம் கூறுகிறது.

“கிழக்கு மாகாணத்தின் சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபரை தொடர்பு கொள்ள முயன்ற போதும் பதிலேதும் இல்லை” என அந்த ஊடகவியலாளர்கள் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளனர். எனினும் கிழக்கு மாகாண சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் உத்தற்கு அமைய தாங்கள் மயிலத்தமடுவிற்கு செல்ல அனுமதிக்க முடியாது என்று என ஹேரத் (60073) மறும் எச் எம் எம் வித்யாரட்ண (36739) ஆகியோர் மயிலத்தமடு சோதனைச் சாவடியில் மறித்து தெரிவித்ததாக அந்த ஊடகவியலாளர்கள் கூறியுள்ளனர்.

இதையே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கான பணிப்பாளராக இருக்கும் லால் அவர்களும் கூறினார் என்கிறார்கள் அங்கு பயணித்த அந்த செய்தியாளர்கள், ஆனால் இருவருமே அதற்கான காரணத்தை விளக்கவில்லை எனவும் அவர்கள் பொலிஸ் மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளனர்.

“இது அரசியல் யாப்பில் எமக்கு அளிக்கப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரத்தை மீறும் செயலாகும் என்று நாங்கள் நம்புகிறோம். சட்ட ரீதியாக ஒன்றுகூடி பயணிப்பதற்கு இருக்கும் உரிமையை மீறும் நடவடிக்கையாகும். மேலும் எமது அரசியல் யாப்பின்படி சட்டத்தில் அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் புறக்கணிப்பின்மையும் அளிக்கப்பட்டுள்ளது. இவை மட்டுமின்றி எம்மை சட்ட விரோதமாக தடுப்பதும் அரசியல் யாப்பிற்கு எதிரானதாகும்”.

இந்த கடிதத்தில் ஊடகவியலாளர்கள் ருக்ஷன் ∴பெர்ணாண்டோ, காமந்தி விக்ரமசிங்க, ரேகா நிலுக்ஷி, கணேசன் ஜெகன், மெலனி மனேல் பெரேரா ஆகியோர் கையொப்பம் இட்டுள்ளனர்.

# யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள பிரபல பேச்சாளர் மோகனசுந்தரம் அவர்களது சிறப்புரை





இந்தியாவின் பிரபல நகைச்சுவை பேச்சாளர் திரு. மோகனசுந்தரம் அவர்களது சிறப்புரையானது யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

“நல்லதோர் குடும்பம்” என்ற தலைப்பின் கீழ் எதிர்வரும் நவம்பர் 18ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு இந்த சிறப்புரை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வினை யாழ்ப்பாணம் - இந்திய துணைத்தூதரகம் ஏற்பாடு செய்துள்ளதுடன், இது முற்றிலும் இலவசமான ஒரு நிகழ்வாக அமைந்துள்ளது. அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, முன்னாள் பிரதமர் மஹிந்த, முன்னாள் நிதியமைச்சர் பசில் உள்ளிட்ட பலரே பொறுப்பு என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது



இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ச உள்ளிட்ட பலரே பொறுப்பு என உயர் நீதிமன்றம் நவ.14 தீர்ப்பளித்துள்ளது.

மூன்று ராஜபக்ச சகோதரர்கள் மற்றும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் பேராசிரியர் டபிள்யூ. டி. லக்ஷ்மன், நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல, முன்னாள் ஜனாதிபதி செயலாளர் பி.பி. ஜயசுந்தர மற்றும் மத்திய வங்கியின் நாணய சபை உறுப்பினர்கள் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சந்திரா ஜயரத்ன மற்றும் பலர் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு விசாரணை கோரி தாக்கல் செய்த இரண்டு அடிப்படை உரிமை (FR) மனுக்கள் மீதான தீர்ப்பு இன்று உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாமால் வழங்கப்பட்டது.

நீதியரசர்கள் குழாமின் பெரும்பான்மையானவர்களின் நிலைப்பாட்டின் அடிப்படையில் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை தவறாக கையாண்டதன் விளைவே பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட காரணம் எனவும் நீதியரசர் குழாம் தீர்ப்பளித்துள்ளது.

உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?

Coverall Group Inc

Painting
Bathrooms
Kitchens
Decks
Flooring
Basements
Pot lights
Accent Walls

Contact us 416.706.8160

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
Canadian Tamils Remembrance Organization

www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647)-619-3619

# அறிவித்தல்

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம், மாவீரர் தொடர்பான விபரங்களையும், மாவீரர்களது பெற்றோர், சகோதரர்கள் தொடர்பான விபரங்களையும் திரட்டுகின்றது.
கனடிய மண்ணுக்கு அண்மைக் காலத்தில் வருகை தந்த மாவீரர்களின் குடும்பத்தினர், தற்போது புதிய முகவரியில் வாழும் மாவீரரின் குடும்பத்தினர், புதிய தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தும் மாவீரர்களது குடும்பத்தினர் அனைவரும் தங்களது முகவரி, தொலைபேசி இலக்கம். போன்ற விபரங்களைத் தந்துதவுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

**மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாள்-19.11.2023.**

மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாள் நினைவேந்தல் எதிர் வரும் **19.11.2023** ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் என்பதைக் கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் அறியத் தருகின்றது.

மாவீர்களுக்கான வீர வணக்க நினைவேந்தல்,காலை **10.00** மணிக்கு ஆரம்பமாகி மதியம் **2.00** மணி வரை தொடர்ந்து நடை பெறும்.

மாவீர்களின் பெற்றோர்கள், குடும்பத்தினர், உணர்வாளர்கள், செயற்பாட்டாளர்கள், தமிழ் ஆர்வலர்கள், தன்னார்வத் தொண்டர்கள் அனைவரும் இந்த நாளில் ஒன்றிணைந்து நின்று மாவீரர்களை நினைவேந்துவோம்.

மண்டப முகவரி: **Metropolition Centre. 3840 Finch Ave. East, M1T 3T4**

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.
நன்றி. வணக்கம்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.
தொடர்பு இலக்கம்: 647 619 3619 **ctro@tamilremembrance.com**

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# வட்டுக்கோட்டையில் ஞானவைரவர் ஆலயத்திற்கு மேல் குடைசாய்ந்த அரசமரம்!





ஆலயம் ஒன்றின் மீது மரம் முறிந்து விழுந்ததால் குறித்த ஆலயம் சேதமடைந்துள்ளதாக யாழ்ப்பாணம் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், வலிகாமம் மேற்கு, சங்கானை - வட்டு மேற்கில் (ஜே/167) பாரிய அரசமரம் ஒன்று தொடர்ந்து பெய்த மழையால் குடைசாய்ந்து விழுந்துள்ளது.

இப்பிரிவில் உள்ள ஞானவைரவர் ஆலயத்துக்கு அருகில் இருந்த மரமே இவ்வாறு விழுந்துள்ளது. இதனால் ஆலயத்துக்கு சேதம் ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# நெடுந்தீவில் 750ற்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகள் மீட்பு!





யாழ்ப்பாணம் - நெடுந்தீவில் 750ற்கும் மேற்பட்ட துப்பாக்கிக்கு ரவைகள் 14-11-2023 அன்று மீட்கப்பட்டன.

நெடுந்தீவு கிழக்கு 15 வட்டாரம் பகுதியில் மக்கள் நடமாற்றம் இல்லாத தனியார் காணியில் குறித்த துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய குறித்த பகுதியில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ள நெடுந்தீவு பொலிஸார் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் அனுமதியை பெற்றனர்.

ஜேசிபி இயந்திரத்தின் உதவியுடன் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் இணைந்து நடாத்திய தேடுதலில் ரி 56 துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் 750ற்கும் மேற்பட்ட ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டது.

நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக தேடுதல் நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ள முடியாத நிலையில் முடிவுறுத்தப்பட்டதாக தெரியவருகிறது.



# அடை மழை காரணமாக யாழ்ப்பாணத்தில் 94 குடும்பங்கள் பாதிப்பு!

தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழை காரணமாக இதுவரை யாழ்ப்பாணத்தில் 94 குடும்பங்களைச் சேர்ந்த 317பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 59 குடும்பங்களைச் சேர்ந்த 197 அங்கத்தவர்கள் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பொலிகண்டி பகுதியில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 120 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அதே பகுதியில் ஒன்பது குடும்பங்களைச் சேர்ந்த 36பேர் ஒரு பாதுகாப்பு மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வெளிநாடுகளுக்கு அனுமதியை கொடுத்துவிட்டு 500 மில்லியன் நிதியை ஒதுக்குவது பற்றி சிந்திக்க வேண்டும் — அகில இலங்கை தொழிலாளர் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் எம்.வி.சுப்பிரமணியம்

இன்றைய சூழலில் மீனவ மக்கள் கடும் இன்னல்கள் மற்றும் அந்நிய நாடுகளின் ஆக்கிரமிப்புக்கு மத்தியில் பெரும் சவால்களை எதிர்கொண்டு வருவதாக வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவரும், அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளருமான எம்.வி சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாதகலில் உள்ள அவரது இல்லத்தில் 14-11-2023 இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக அலோசிக்கப்படுகிறது. அதேவேளை இந்திய இழுவைப் படகுகளின் ஆக்கிரமிப்பை தடுப்பதற்கு அரசால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதைத்தாண்டி உள்ளூர் இழுவைப் படகுகளின் தாக்கம் பெரிதாக இருக்கின்றது. அதேவேளை தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல்கள் அவர்களுடைய வருகை மிகவும் மிகையாகவும் இங்குள்ள மீன்வளங்களை வாரிச்செல்லும் நோக்கத்திலே சகலதும் நடைபெற்றுவரும் வேளையில் நேற்றையதினம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் வடக்கில் மீன்பிடி உற்பத்திக்கும் மீன்பிடியை அபிவிருத்தி செய்வதற்குமென 500மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுக்கு அனுமதியை கொடுத்துவிட்டு வெளிநாட்டு படகுகள் இங்கு வந்து ஆக்கிரமித்து மீனை அள்ளிக்கொண்டு போவதற்கு அனுமதி அளித்துவிட்டு எமது மீன்பிடி அபிவிருத்திக்கான நிதியை ஒதுக்கியிருப்பது மிகவும் சிந்திக்கவேண்டிய விடயமாக காணப்படுகின்றது.

அதேவேளை 30 வருடங்களுக்கு மேலாக போரினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இதுவரை ஒரு ஆக்கபூர்வமான நிவாரணமோ அல்லது இழப்பீடுகளோ வழங்கப்படாத நிலையில் மீனவர்களுக்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கியிருப்பது எங்களை சிந்திக்க வைத்துள்ளது.




இது இங்கே அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்காகவா அல்லது வெளிநாட்டு சக்திகளை இங்கே கொண்டுவந்து அவர்களுடைய இருப்புகள் மற்றும் அவர்களுடைய நிலையங்களை பலப்படுத்துவதற்காகவா என்று தெரியவில்லை. இந்த 500மில்லியன் ரூபா எதற்காக ஏன் இப்போது ஒதுக்கியிருக்கின்றார்கள் என்ற விபரத்தை நாம் தெளிவாக அறிந்த பின்னர் தான் இதற்கான முடிவுகளை எட்டவேண்டும். இந்த அரசாங்கத்தின் நிலைப்பாட்டிலே இதுவுமொரு சந்தேகமான விடயமாக பார்க்கப்படுகிறது.

இங்கே மீனவர்களுக்கு நிறைய பிரச்சினைகள் காணப்படுகிறது. எனவே அவற்றை முதலில் நிவர்த்தி செய்துவிட்டு இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு 500 மில்லியன் ரூபாயை வடக்கிலுள்ள மீனவர்களுக்கு முழுமையாக பயன்படுத்தவேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

# அடை மழை காரணமாக யாழ்ப்பாணத்தில் 850 குடும்பங்கள் பாதிப்பு!

தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழை காரணமாக இதுவரை யாழ்ப்பாணத்தில் 850 குடும்பங்களைச் சேர்ந்த 2910 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 234 குடும்பங்களைச் சேர்ந்த 766 அங்கத்தவர்கள் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 58 குடும்பங்களைச் சேர்ந்த 204 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 279 குடும்பங்களைச் சேர்ந்த 950 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 9 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 23 குடும்பங்களைச் சேர்ந்த 90 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 43 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 54 குடும்பங்களைச் சேர்ந்த 191 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 180 குடும்பங்களைச் சேர்ந்த 630 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நெடுந்தீவில் கைதான இந்திய மீனவர்கள் நிபந்தனைகளுடன் விடுதலை — ஒருவருக்கு சிறை!

எல்லை தாண்டி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 21 பேரை நிபந்தனையுடன் விடுதலை செய்தும் ஒருவருக்கு சிறை தண்டனை விதித்தும் ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதாவது 21 பேரும் ஐந்து ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட, 18 மாத சிறை தண்டனையுடன் விடுவிக்கப்பட்டனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 22 இந்திய மீனவர்கள் தொடர்பான வழக்கு விசாரணை 15-11-2023 ஊர்காவற்றுறை நீதிமன்றில் இடம்பெற்றது.

இதையடுத்து குறித்த 22 மீனவர்களுக்கும் ஊர்காவற்றுறை நீதவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் இரண்டாவது தடவையாக இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய நிலையில் அவருக்கு சிறை தண்டனை விதித்தும் ஏனைய 21 மீனவர்களை நிபந்தனையுடன் விடுதலை செய்தும் நீதவான் ஜே.கஜநிதிபாலன் உத்தவிட்டார்.

# மொழிபெயர்ப்புக்கு முதன்முதலாக விருதுகளை வழங்கியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்

## தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் அவ்வை ந.அருள் புகழாரம்





சென்னையில் கடந்த நவம்பர் 9-ஆம் தேதியன்று எழுத்தாளரும் புரவலருமான நல்லி குப்புசாமியின் மூன்று நூல்கள் வெளியீட்டு விழா மற்றும் "திசை எட்டும்" மொழியாக்க விருதுகள் வழங்கும் விழாவும் ராஜா அண்ணாமலை புரத்திலுள்ள செட்டிநாடு வித்யாஷ்ரம் பள்ளி அரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் அவ்வை ந. அருள் தலைமையேற்றதோடு, நூல்களை வெளியிட்டும், மொழியாக்க விருதுகளை வழங்கியும் தலைமையுரையாற்றினார். அவர் பேசியதாவது: "நாடறிந்த பெருந்தகையும், நல்லவர் நெஞ்சிலெல்லாம் புகழ் மணக்க வாழும் பட்டு வணிகத் திலகமாகவும், இசை, நாடகம், ஆடல், ஆவணம், மொழியாக்கம், தேசியம், தெய்விகம், பாரதியம், உடல்நலம், வணிக நுணுக்கம் முதலிய துறைகளில் தோய்ந்த பெருமிதம் கொண்டவருமாக விளங்குபவர் பத்மஸ்ரீ நல்லி குப்புசாமி.

உள்ளத்தில் பட்டதை, உண்மை என்றுணர்ந்ததை உலகுக்கு ஏற்றம் தரும் கருத்துக்களை, சிந்தனைக்குரிய செய்திகளைத் தொகுத்து, நம் உள்ளம் தொட்டுப் பேசும் பரிவுமிக்க எழுத்துக்குச் சொந்தக்காரராகவும் இருக்கும் நல்லி குப்புசாமி எழுதிய இரு நூல்களையும், அவரைப் பற்றி ஆர். நடராஜன் எழுதிய நூலொன்றையும் வெளியிடுவதில் பெரிதும் மகிழ்கிறேன்.

"திசை எட்டும்" காலாண்டு இதழ் சார்பில் 2023-ஆம் ஆண்டிற்கான மொழியாக்க விருதுகள் 7 மொழிபெயர்ப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழில் மொழிபெயர்ப்பு பற்றி பொதுவெளியில் கவனம் இல்லாத காலமொன்று இருந்தது.



ஒருமுறை "திசை எட்டும்" மொழியாக்க காலாண்டு இதழ் குறித்து பத்திரிகை ஒன்றில் ஒரு குறிப்பு வெளியானது. அதைப் படித்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு. கருணாநிதி, உடனே அதுவரை வெளியான "திசை எட்டும்" இதழ்கள் மொத்தத்தையும் வாங்கி வரச் சொல்லிப் படித்தார்.

கடலூர் மாவட்டத்தில் குறிஞ்சிப்பாடி எனும் சிறிய ஊரில் இருந்து, மொழியாக்கத்திற்காக இப்படியொரு இதழா என்று வியந்துபோனதோடு, மொழிபெயர்ப்பாளரும் "திசை எட்டும்" இதழின் ஆசிரியருமான குறிஞ்சி வேலனையும் அழைத்துப் பாராட்டினார். அத்தோடு நின்றுவிடவில்லை. தமிழக அரசின் சார்பில் ஜி.யு.போப் மொழியாக்க விருதினை வழங்கிட உரிய ஏற்பாட்டினைச் செய்தார். மேலும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் உலக மொழிபெயர்ப்பு நாளை முன்னிட்டு ஆண்டுதோறும் மொழிபெயர்ப்பாளர்களுக்கு விருதுகளை வழங்கிடவும் செய்த பெருமை கலைஞரையே சாரும்" என்றார்.

விழாவில், மதுரையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பேராசிரியர் ச. வின்சென்ட்-டிற்கு மொழிபெயர்ப்புக்கான "வாழ்நாள் சாதனையாளர் விருது"ம், இணைப்பேராசிரியர் மோ.செந்தில்குமார், சாய் சுப்புலட்சுமி, சதீஷ் வெங்கடேசன், பாக்கியம் சர்மா, துளசி பட், ஆதி வள்ளியப்பன் ஆகியோருக்கு சிறந்த மொழிபெயர்ப்புக்கான விருதுகளும் வழங்கப்பட்டன.

விழாவில், "திசை எட்டும்" ஆசிரியர் குறிஞ்சிவேலன், "கலைமகள்" ஆசிரியர் கீழாம்பூர் சங்கர சுப்பிரமணியன், ரவிச்சந்திரன், தொழிலதிபர் வி.ஜி. சந்தோசம், இயக்குநர் எஸ்.பி. முத்துராமன், ஊடகவியலாளர்கள் மு. முருகேஷ், திருவேங்கிமலை சரவணன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# 50ம் ஆண்டில் கால்பதிக்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கிளை அமெரிக்காவில் உதயமாகின்றது

1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பெற்றதும் எதிர்வரும் 2024ம் ஆண்டில் தனது 50ம் ஆண்டில் கால்பதிப்பதும். உலகின் பல நாடுகளிலும் கிளைகளைக் கொண்டு இயங்குவதுமான, உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கிளை அமெரிக்காவில் உதயமாகின்றது என்னும் நற்செய்தியை இங்கு பதிவு செய்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமைச் செயலகம் கனடாவில் இயங்கிவருகின்றது. இந்த நீண்ட கால வரலாற்றைக் கொண்ட இயக்கத்திற்கான உத்தியோகபூர்வ பதிவு கனடிய மத்திய அரசாங்கத்தினால் ஏற்கொள்ளப்பெற்றுள்ளது.

இயக்கத்தின் தலைமையக செயற்பாட்டுக்குழுவின் தலைவராக கனடாவாழ் வினாசித்தம்பி துரைராஜா அவர்களும் செயலாளர் நாயகமாக ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்களும் வடஅமெரிக்க நாடுகளுக்கான சிரேஸ்ட உப தலைவராக கனடா வாழ் சிவா கணபதிப்பிள்ளை அவர்களும் அகிலக் கிளைகளின் ஒருங்கிணைப்பாளராக ஜேர்மனி வாழ் இ. ராஜசூரியர் அவர்களும் கொள்கை பரப்புச் செயலாளராக கனடா வாழ் நடா ராஜ்குமார் அவர்களும் நிர்வாகச் செயலாளராக ஜேர்மனி வாழ் கிரேஷன் ஜேம்ஸ்ரன் அவர்களும் அனைத்துலக ஊடகப் பொறுப்பாளராக கனடா வாழ் லோகன் லோகேந்திரலிங்கம் அவர்களும் தொடர்ச்சியாகப் பணியாற்றி வருகின்றார்கள்.

எதிர்வரும் 2024ம் ஆண்டு செப்ரம்பர் மாதத்தில் அமெரிக்காவில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பொன்விழாக் கொண்டாட்டங்கள் கோலாகலமாக நடைபெறவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதனை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்கா தேசத்தில் முதற் தடவையாக உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கிளை ஒன்றை நிறுவ தற்போது ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.



இந்த முயற்சியின் முதற் கட்டமாக அமெரிக்கா வாழ் சட்டத்தரணியும் கவிஞரும் மேடைப் பேச்சாளரும் முன்னாள் வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளருமான மார்க்கண்டு விக்னேஸ்வரன் அவர்களிடம் இந்த பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி விடயம் தொடர்பாக கனடாவிற்கு வருகை தந்திருந்த மார்க்கண்டு விக்னேஸ்வரன் அவர்களை உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் லோகன் லோகேந்திரலிங்கம் அவர்களும் நடா ராஜ்குமார் அவர்களும் ஸ்காபுறோ நகரில் சந்தித்து உரையாடினார்கள்.

மேற்படி சந்திப்பில் அமெரிக்காவில் கிளையை நிறுவுவது. 50வது ஆண்டான பொன் விழாவை வெற்றிகரமாக நடத்துவது, உலகெங்கும் உள்ள இயக்கத்தின் கிளைகளை சீர் செய்வது மற்றும் தற்போது உலகத் தமிழ் பண்பாட்டு கிளையின் செயற்பாடுகளுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் தமிழ்நாட்டில் செயற்பட்டு வரும் சில நபர்களின் செயல்களுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் அறிக்கை வெளியிடுவது, தேவையானால் சட்ட நடவடிக்கை எடுப்பது போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பெற்றது. இங்கு காணப்படும் படத்தில் திருவாளர்கள் மார்க்கண்டு விக்னேஸ்வரன், லோகன் லோகேந்திரலிங்கம் மற்றும் நடா ராஜ்குமார் ஆகியோர் நிற்பதைக் காணலாம்.


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# 1990 – இலங்கையில் இதுஉயிரைக் காக்கும் இலக்கம்

## 1990 - A NUMBER THAT COULD SAVE A LIFE IN SRI LANKA!

தொலைபேசி இயக்கம் 1990 இற்குரிய - சுகப்படுத்தும் சேவை (சுவ சேரிய) - அவசர நோயாளர் காவு வண்டிச் சேவையானது, தேசிய அளவிலானது் இலவசமானது. அது இந்திய மக்களின் உதவியோடு சாத்தியமாகியது. இலங்கையின் தெற்கு மற்றும் மேற்கு மாகாணங்களுக்கு இது 2016 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. 2018 ஜூலை மாதம் வடமாகாணத்திற்கும் அதன் சேவை விஸ்தரிக்கப்பட்டது. இது நீண்ட காலமாக உணரப்பட்ட மிகத் தேவையான ஒரு சேவை. இது ஏற்கனவே பல உயிர்களை பாதுகாத்திருக்கிறது. இது மிகவும் முக்கியமானதும் பயன்மிக்கதும் என்பது ஈஸ்டர் குண்டு வெடிப்பின் போதும் பெருந் தொற்று நோயின் போதும் நிருபிக்கப்பட்டது. 2022 ஆம் ஆண்டு இந்தச் சேவையானது 3,44 623 தடவைகள் உதவியுள்ளது. அதில் 21,650 சேவைகள் வடமகாணத்தில் வழங்கப்பட்டன. அதில் 26 வீதமானவை விபத்துக்களோடு சம்பந்தப்பட்டவை.

இந்த அவசர மருத்துவ தொழில்நுட்பவியலாளர்கள் அத்தியாவசிய சேவைகளுக்கு உரியவர்கள். இவர்கள் ஹைதராபாத்தில் எட்டு கிழமைகள் பயிற்சி பெறுகிறார்கள். பொதுவான மருத்துவ அவசர தேவைகளுக்கும் விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவ சேவைகளுக்கும் அவர்கள் பயிற்றப்பட்டிருக்கிறார்கள்.

மீளப்புதுப்பித்தலுக்கான பயிற்சியை கிரமமாகப் பெற வேண்டியது இச்சவையினர் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களில் ஒன்று.குறிப்பாக, பெருந்தொற்று நோயின் போதும் பொருளாதார நெருக்கடியின் போதும் அவ்வாறு இச்சேவையில் ஈடுபடுபவர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டியிருந்தது. இப்பொழுது களனி பல்கலைக்கழகத்தில் இச்சேவை வழங்குனர்களுக்கான டிப்ளோமோ கற்கை ஒன்று நடத்தப்படுகின்றது.







இப்போது நடக்கும் பயிற்சிகளை பிரித்தானிய, பேக்கிங்காம்ஷியர் நியூ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆறு பரா மெடிக்கல் உறுப்பினர்கள் வழங்குகிறார்கள். அவர்கள் இங்கு ஒக்டோபர் மாத இறுதியிலிருந்து இரண்டு கிழமைகள் தங்கியிருந்து பயிற்சிகளை வழங்கினார்கள். கொழும்பு, தம்புள்ள, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று இடங்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்தக் குழு தொண்டு அடிப்படையில் இங்கு வந்திருக்கின்றது. இக்குழுவுக்கு பேராசிரியர். வில் ப்ரோட்டன் தலைமை தாங்குகிறார். அவர் யாழ்ப்பாணத்திற்கு இதற்கு முன்னரும் இரண்டு தடவைகள் வந்துள்ளார். வடமாகாண சபையின் நோயாளர் காவு வண்டிச் சேவையில் ஈடுபடும் குழுவினருக்கு அவர் பயிற்சி வழங்கியிருக்கிறார். இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் பயிற்சியை வழங்குவதற்கு தேவையான குழுவினரை அவர் மிக மகிழ்ச்சியோடு ஒழுங்குபடுத்தினார்.

இந்த பயிற்சி நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் இரண்டு நாட்கள் நடந்தன. வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 65 நோயாளர் காவு வண்டி அலுவலர்கள் இப் பயிற்சியை பெற்றுக் கொண்டார்கள். இப்பயிற்சிகள் மிகவும் பிரயோசனமானவை அவர்கள் என்று கூறினார்கள். வருங்காலத்தில் அவசர மருத்துவ கவனிப்புக்கு தேவையான தொழில் சார் அறிவை அது மேலும் விருத்தி செய்திருப்பதாகவும் கூறுகிறார்கள்.

இவர்களுடைய ஆர்வம் மற்றும் ஈடுபாட்டைக் குறித்து பிரித்தானியாவிலிருந்து வந்த பயிற்றுவிப்பாளர்களும் திருப்தி தெரிவித்தார்கள். இக்குழுவினர் ஆண்டுதோறும் இலங்கைக்கு வர விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

ஸ்ரீலங்கா எயார் லைன் நிறுவனம் இப்பயிற்றுனர்களுக்கு இலவச விமான டிக்கெட்டுகளை வழங்கியதன்மூலம் இப்பயிற்சி திட்டத்தைச் சாத்தியமாக்கியது. மேலும், விமான டிக்கெட்டுகளுக்குரிய வரிப்பணத்தை, இலங்கைத் தமிழர்களால் உருவாக்கப்பட்ட பன்னாட்டு மருத்துவ சுகாதார அமைப்புச் (IMHO) செலுத்தியது. இப்பயிற்சித் திட்டம் வலம்புரி ஹோட்டலில் இடம் பெற்றது. பயிற்சி வழங்கிய குழுவுக்கு ஹோட்டல் நிர்வாகம் குறைந்த கட்டணத்துக்குச் சேவைகளை வழங்கியது.

தொலைபேசி இலக்கம் 1990 இலவச நோயாளர் காவு வண்டிச் சேவை குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு இருந்த போதிலும், அது இலவசமாகக் கிடைக்கும் சேவை என்பதில் உள்ள முக்கியத்துவத்தைக் குறித்துப் போதிய புரிந்துணர்வு மக்கள் மத்தியில் இல்லை. இந்த நோயாளர் காவு வண்டிக் குழுவினர் பொதுவான மருத்துவ அவசர நிலைமைகளின் போதும், விபத்துகளில் கடுமையாகக் காயப்பட்டவர்களுக்கும், உதவக்கூடிய பயிற்சிகளைப் பெற்றிருக்கிறார்கள். இதன் பொருள் என்னவென்றால், மருத்துவ சிகிச்சையானது விபத்து நடந்த இடத்திலேயே தொடங்குகிறது என்பதுதான். ஆனால் நோயாளிகளை தனியார் வாகனங்களில் காவும்பொழுது அது கிடையாது. ஆஸ்பத்திரிக்கு போகும்வரை அவர்கள் சிகிச்சைக்காகக் காத்திருக்க வேண்டும். அது மேலும் அவர்களுக்கு பிரச்சனைகளை ஏற்படுத்தலாம்.

இந்த இலவச நோயாளர் காவு வண்டிச் சேவைக்கு ஒரு கைபேசிச் செயலி உண்டு. அதனை ஸ்மார்ட் கைபேசிகளில் தரவிறக்கம் செய்து கொள்ளலாம். அந்த இலக்கத்துக்கு அழைத்தால் GPS தொழில்நுட்பத்தின் மூலம் அழைப்பு வந்த இடத்தை விரைந்து கண்டுபிடிப்பார்கள். பொதுமக்கள் அந்தச் செயலியைப் பயன்படுத்த வேண்டும். அதை உண்மையான, அவசர மருத்துவ நிலைமைகளின் போதுதான் பயன்படுத்தப்படலாம் என்பதனை பொதுமக்கள் விளங்கிக் கொள்ள வேண்டியது முக்கியமானது. இச்சேவையைத் துஸ்பிரயோகம் செய்வது உண்மையாகப் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் இச் சேவையை உடனடியாகப் பெறுவதைப் பாதிக்கும். இப்பொழுது வட மாகாணத்தில் அழைப்புக் கிடைத்த 12 நிமிடங்களில் சேவை கிடைக்கின்றது. அதற்கு தெருக்களில் ஏனைய வாகன சாரதிகள் மேலும் பொறுப்புணர்வோடு நடந்து ஒத்துழைக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது.

இச்சேவைக்குரிய பச்சை, சிவப்பு மற்றும் வெள்ளை நிற நோயாளர் காவு வண்டிகள் எமது தெருக்களிலும் ஆஸ்பத்திரிகளின் அவசர சேவைப் பிரிவின் முன்னாலும் வழமையாகப் பார்க்க கிடைக்கின்றன. அவசர, மருத்துவ சேவைகளை நாடுவோர் இதனால் மேலும் பயனடைவர் என்று நம்பலாம். நிச்சயமாக இச் சேவை மேலும் விருத்தி செய்யப்பட வேண்டும். அரசாங்கம், சுகாதாரத் துறை சார்ந்தவர்கள், மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் முழுமையான ஆதரவின் மூலமே அது சாத்தியமாகும். இப்பொழுது நடந்து முடிந்திருக்கும் பயிற்சித் திட்டமானது, தரமான கவனிப்பு வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும்.

1990 சேவை உயிர்களைப் பாதுகாப்பதற்கும் அதைத் தொடர்ந்து செய்வதற்கும் உதவியிருக்கின்றது.

Dr. தயாளன் அம்பலவாணர்
சத்திர சிகிச்சை நிபுணர்

1990 - A NUMBER THAT COULD SAVE A LIFE!

The 1990 Sugapaduthum Sevai (Suwaseriya) emergency ambulance service for the Northern Province was launched in July in 2018. The Suwaseriya service is a free national emergency ambulance service made possible with the help of the Indian people. After the southern and western provinces where the service started in 2016, the Northern Province was the next province where the service was extended. This was a much needed and long felt pre hospital service which has already saved lives. Its importance and usefulness became very evident following the Easter bombings and then during the covid pandemic. In 2022 the 1990 service attended to 344,623 incidents of which 21,650 was in the Northern Province. Of these incidents 26% are due to road traffic accidents.

The Emergency Medical Technicians (EMT) and pilots (drivers) who serve in this essential service originally received five weeks of training in Hyderabad in managing common medical emergencies and trauma (road traffic accident victims etc). One of the many challenges faced by the service was providing regular refresher training and updates for these staff especially during the covid period and also after the economic crisis. A diploma course will soon be available in the country for EMTs to be trained locally.

Ongoing training became possible this year thanks to a six member team of paramedics from England from the Buckinghamshire New University spending two weeks here in Sri Lanka from the end of October. The team came on a voluntary basis and was headed by Prof.Will Broughton who has been here in Jaffna twice before to train the ambulance crews of the Northern Province health ministry. Prof.Broughton was only too happy to arrange the team for this program. Three training sessions were held in Colombo, Dambulla and finally in Jaffna. The session in Jaffna was conducted over two days and ended on Friday 10th November. Sixty five ambulance staff from the Northern and Eastern provinces underwent this training in Jaffna. The participants found the training extremely useful and said that it would help them in providing improved emergency care. The team from England was also very satisfied with the skills, enthusiasm and involvement of the ambulance crews. The team has expressed their willingness to come to Sri Lanka on an annual basis.

This training program was made possible due to the involvement of Sri Lankan Airlines who provided free air tickets for the team. An important contribution to cover the tax component of the air tickets was by the International Medical Health Organisation (IMHO) USA which is made up of medical professionals of Sri Lankan Tamil origin. The training was held in the Valampuri Hotel who also provided the accommodation for the visiting team at reduced rates.

Though more and more people have become aware of the 1990 ambulance service, not enough understand its free availability and importance. The staff of the 1990 service are trained to deal with common medical emergencies as well as those who have suffered serious injuries. This means that treatment has started at the site of the emergency or accident. This would not be the case if the person was taken in a private vehicle. They would then need to wait to get to the hospital before treatment is given and that delay could cause them problems. The 1990 service has an app that could be downloaded on any smartphone. Calling the number using this app enables the ambulance service to use GPS technology to locate the site quickly. The public is strongly urged to use this app. It is also important that the public understands that this ambulance service is only for genuine emergencies. Misuse of the service can result in genuine patients not having an ambulance arrive on time. At present the ambulance response time from the time of the call in the Northern Province is 12 minutes. It is also hoped that drivers on the road will be responsible and allow ambulances with flashing lights to go past without impeding them.

The green, red and white colored 1990 ambulances have become a common sight on our roads and in front of emergency units of hospitals. It is hoped that more and more emergency cases will make use of this service. There is of course room for improvement. That will be possible through the service receiving the full support of the government, healthcare professionals and the public. Training programs such as the one just concluded will ensure that good quality care is provided.

1990 service has helped save lives and will continue to do so.

Dr.Thayalan Ambalavanar
Surgeon




வரவுசெலவுத்
திட்டம்
2024
உங்கள் கருத்தைக் கூறுங்கள்
பிராம்ப்டன் வர்த்தக வட்டமேஜை உரையாடல்
நவம்பர் 21, காலை 9:30
டெலிஃபோன் டவுன்ஹால்
நவம்பர் 21, மாலை 7 மணி
வார்டு கவுன்சிலர்களுடன் காபி
குடித்தபடி உரையாடல்
நவம்பர் 22 - 28
மேலும் அறியவும்
www.brampton.ca/budget
BRAMPTON


NOV 21
TAMIL EELAM
NATIONAL FLAG DAY
தமிழீழ தேசிய
கொடி நாள்
கார்த்திகை 21
TRANSNATIONAL GOVERNMENT OF TAMIL EELAM
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்!
THE THIRST OF TAMILS IS THE HOMELAND OF TAMIL EELAM


tasty
தமிழா
TM
தமிழ் மண்ணிலிருந்து
நேரடியாக உலகெங்கும்...
பனை வெல்லம்
தேன் நெல்லி
மரச்செக்கு எண்ணெய்கள்
சுக்கு மல்லி காபி தூள்
யாழ். கறித்தூள்
இலங்கை
மற்றும்
தென்னிந்திய
மசாலா
பொருட்கள்
பாரம்பரிய உணவு
வகைகள்..
கனடாவில்
Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..
MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.
Call:
416 293 4010
MAHAANS
PICK & PRESS OIL MILL INC

# மரண அறிவித்தல்

**தோற்றம்: 31-12-1969**
**மறைவு: 13-11-2023**



## திரு தெய்வேந்திரம் தெய்வரூபன்

கிளிநொச்சி முரசுமோட்டை 1ம் யூனிட்டைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வேந்திரம் தெய்வரூபன் அவர்கள் 13-11-2023 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வேந்திரம், வர்னமணி தம்பதிகளின் பாசமிகு புத்திரனும், காலஞ்சென்ற பொன்னையா, இராசம்மா (பிரான்ஸ்) தம்பதிகளின் அன்பு மருமகனும்,

ஜெயகாந்தி (வதனி) அவர்களின் அன்புக் கணவரும்,

வினுஷா, யஸ்வி, கவீஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும்,

செல்வன், சுமதி, கோமதி, முகுந்தன், கீதா, வரதன், பாலன் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

நிதி, இராசேந்திரம், ராசன், தரகா, பாபு, கமலி, சுஜி, உதயன், ராசன், பாலன், சிவா, பகீர், தீபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

***அன்னாரின் பூதவுடல் 19-11-2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 4:00 மணி தொடக்கம் 9:00 மணிவரை, 20-11-2023 திங்கட்கிழமை காலை 8:00 மணிளி தொடக்கம் 11:00 மணிவரை Ajax Crematorium & Visitation Centre (384 Finley Ave, Ajax, ON L1S 2E3) இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, பின்னர் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.***

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள்
அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எமது தமிழ்த் தேசிய அரசியல் நீரோட்டத்தில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தோடு இணைந்து பங்காற்றிய அன்னாரின் மறைவிற்கு உலகின் பல நாடுகளிலும் இயங்கிவரும் சக அங்கத்தவர்கள் அனைவரும் தங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.


- நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் -

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு:** செல்வன் (சகோதரர்): (416) 823-8739
வதனி (மனைவி): (647) 533-8486
முகுந்தன் (சகோதரன்): (647) 467-2342
வரதன் (சகோதரன்): 33 651 102928

# கண்ணீர் அஞ்சலி

**மலர்வு:** **28-10-1927**
**உதிர்வு:** **16-11-2023**



## அமரார் திரு. கந்தையா கதிரித்தம்பி

(புன்னாலைக்கட்டுவன்)
(கனடா)

*காணாத கண்ணிற்கு கரைந்து போன கற்பூரமே*
*வாழ்நாளில் மறவாது வடிக்கிறோம் கண்ணீர்*
*ஓம் சாந்தி சாந்தி சாந்தி*

**அன்னாரின் பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை 11-19-2023 அன்று மாலை 5:00 - 9:00 வரையும், செவ்வாய்க்கிழமை 11-21-2023 காலை 11:30 - 1:00 வரையும்** Chapel Ridge Funeral Home & Cremation Centre (8911 Woodbine Ave, Markham ON L3R 5G1) **ல் பார்வைக்காக வைக்கப்பட்டு, பின்னர் செவ்வாய்க்கிழமை 11-21-2023 பிற்பகல் 1:00-2:00 வரையும் கிரியைகள் நடைபெற்று, தொடர்ந்து 3:00 மணிக்கு** Highland Hills Crematorium (12492 Woodbine Ave, Gormley ON L0H 1G0) **ல் தகனம் செய்யப்படும்.**

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**தொடர்புகளுக்கு:**

**சிறிகாந்தா – மகன் (இங்கிலாந்து)** +447816455850
**ரூபா – மகள் (கனடா)** 647-498-5956
**மதி – மகள் (ஜேர்மனி)** +4915733722932
**கௌரி – மகள் (ஜேர்மனி)** +491738099471
**சர்வேஸ் – பேறாமகன் (கனடா)** 647-720-9780
**சக்திவேல் (ஜேர்மனி)** +4926010073



Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

# KANAGAAMBIKAI Pawn Brokers




30
வருட சேவைகள்

## வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க புதிய கிளை உதயம்!

# கனகாம்பிகை

## உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

**Pawn Bank Inc.**™
Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198


ஈழமுரசு
ஈழமுரசும் கனடா வாழ் தமிழ் மக்களும்
பெருமையுடன் கொண்டாடும் தமிழீழத் தேசியத்
தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின்
69
தலைவன்
பிறந்தநாள்
அதுவே
தமிழன்
நிமிர்ந்த நாள்!
வீழ்ந்து விடாத
வீரம்
மண்டியிடாத
மானம்
அகவை விழா
மாபெரும் எழுச்சி விழா
இருப்பாய் தமிழா நெருப்பாய்!
AAROSAI
2023
நவம்பர்
26
ஞாயிறு
மாலை
5 மணி
இடம்:
TORONTO
METROPOLITAN CENTRE
3840, Finch Ave East;
Scarborough ON., M1T 3T4
(Kennedy & Finch)
MONTREAL
Le Château Royal
3500 Bd du Souvenir,
Lavel, Montreal
QC H7V 1X2
ஈழமுரசின் விசேட இணைப்பில் தேசியத்தலைவருக்கு வாழ்த்து தெரிவிக்க விரும்பின் தொடர்புகொள்ளவும்
ஈழநாடு
குரல்
செந்தாமரை
உதயன்
விளம்பரம்
வணக்கம்
Krishna
LIVE
TELECAST
CANADA
சிதம்பரம்
FM 88.9 HD3
timeFM
தமிழ் மிரர்
Tamil Mirror
Toronto (647) 657-8566, (647) 783-3466, (587) 982-8829, (437) 224 7923
Montreal 438-483-1157
Yugam Media Inc

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வட்டுக்கோட்டை இந்து கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா!

வட்டுக்கோட்டை இந்து கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் நினைவு நாளும் 10-11-2023 அன்றையதினம் நடைபெற்றது.

கல்லூரியில் உள்ள சரஸ்வதி தேவியின் திருவுருவச் சிலைக்கு பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. பின்னர் விருந்தினர்களுக்கு மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. பின்னர் தேவாரம் பாடப்பட்டதைத் தொடர்ந்து தேசியக் கொடியை பிரதம விருந்தினர் ஏற்றி வைக்க, பாடசாலைக் கொடியினை கல்லூரியின் முதல்வர் ஏற்றினார்.

பின்னர் விருந்தினர்கள் மேற்கத்தேய இசை வாத்தியங்கள் முழங்க அரங்கத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது. பின்னர் விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றதுடன், மாணவர்களது கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இறுதியாக பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.



கல்லூரியின் முதல்வர் லங்கா பிரதீபன் அவர்களது தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வலிகாமம் கல்வி வலயத்தின் பணிப்பாளர் திரு. க.ஜெ. பிரெட்லி பிரதம விருந்தினராகவும், தேசிய பாடசாலை கிளை மத்திய அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. க.மணிமார்பன் சிறப்பு விருந்தினராகவும், கொழும்பு கல்வி வலயத்தின் ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் திருமதி. கௌரி இரத்தினவேல் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்ததுடன், ஆசிரியர்கள், மாணவர்கள், அயற்பாடசாலை அதிபர்கள், அயற்பாடசாலை ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் நலன்விரும்பிகள் என பலரும் இதில் கலந்துகொண்டனர்.







# குற்றச்சாட்டை அரசால் நிரூபிக்க முடியாத நிலையில் 3 தமிழர்கள் விடுதலை

16-11-2023

இலங்கையில் பணிபுரிந்த வெளிநாட்டு இராஜதந்திரி ஒருவரைக் கொலை செய்ய சதித் திட்டம் தீட்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டு 15 வருடங்களுக்கும் மேலாக தடுப்புக்காவலில் இருந்த மூன்று தமிழீழ விடுதலைப் புலி சந்தேக நபர்கள் குற்றச்சாட்டை நிரூபிக்க முடியாத நிலையில் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

யோகராஜா நிரோஜன், சுப்பிரமணியம் சுரேந்திரராஜா மற்றும் கனகரத்தினம் ஆதித்யன் ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் அவர்களை விடுதலை செய்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மகேன் வீரமன் உத்தரவிட்டுள்ளார்.



ஓகஸ்ட் 14, 2006 அன்று, கொழும்பு கொள்ளுப்பிட்டி பகுதியில், அப்போதைய பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராக இருந்த பசீர் அலி மொஹமட்டின் வாகனம் மீது குண்டு வீசி படுகொலை செய்ய சதி செய்ததாக குற்றம் சாட்டி, மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபர் 25 குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத் தாக்கல் செய்தார்.



நீண்ட விசாரணையின் பின்னர், பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மகேன் வீரமன் தெரிவித்துள்ளார்.

பிரதிவாதிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா நீதிமன்றில் முன்னிலையானார். அவரது கூற்றுப்படி, இந்த பிரதிவாதிகள் 2009 இல் கைது செய்யப்பட்டனர் மற்றும் அவர்களுக்கு எதிரான விசாரணை 2012 இல் ஆரம்பமானது.

குற்றம் சாட்டப்பட்டவர்களின் 15 ஆண்டுகால இளம் பராயத்தை திருடிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்க ஆட்சியாளர்களை மக்கள் கட்டாயப்படுத்த வேண்டும் என அரசியல் கைதிகளின் விடுதலைக்கான தேசிய இயக்கத்தின் அழைப்பாளர் அருட்தந்தை மாரிமுத்து சத்திவேல் வலியுறுத்தியுள்ளார்.

# *புத்தளம் கல்வி வலய இளையோர்களுக்கு அனைத்து உலக மருத்துவ நல* *அமைப்பின் (IMHO - USA) தலைமைத்துவ பயிற்சி*

புத்தளம் கல்வி வலையத்தை சேர்ந்த ஆண்டிமுனை தமிழ் மகாவித்தியாலயம், உடப்பு தமிழ் மகா வித்தியாலயம், புத்தளம் இந்துதமிழ் மகா வித்தியாலயம், புனித மரியாள் தமிழ் வித்தியாலயம், கற்பிட்டி அ.றோ.க தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளை சேர்ந்த க.பொ.த உயர்தர பரீட்சையை சென்ற வருடம் எழுதிய 35 மாணவர்கள் நவம்பர் 2 முதல் நவம்பர் 5, 2023 வரை நடைபெற்ற இத் தலைமைத்துவ பயிற்சி பட்டறையில் பங்கு பற்றியிருந்தார்கள். இது வவுனியா மரக்காரம்பளையில் அமைந்துள்ள மாகாண தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைக்கல்வி மத்திய நிலையத்தில் நான்கு நாட்கள் கொண்ட வதிவிட பயிற்சியாக நடைபெற்றது.

இதுவரையில் பாடசாலை ரீதியில் ஒட்டு மொத்தமாக வெளிக்கொணரப்படாத மாணவர்களது நடிப்புத் திறன் ,வாசிப்பு திறன், எழுத்துத்திறன், கவித்திறன், விவாதத் திறன், முன்வைப்பு திறன், முன் வருகைத் திறன், ஏற்றுக்கொள்ளும் திறன் மற்றும் உடல்,உள ஆரோக்கிய மேம்பாடு என்பன தூண்டப்படவும் துலங்கவும் இது ஒரு வாய்ப்பாக மாணவர்களுக்கு அமைந்தது.

வளமான வளவாளர்களின் விரிவுரைகள் அற்ற செயற்படுசார் பயிற்சிகள், முழுமைப்படுத்தப்பட்ட விடய ஒழுங்கமைப்புகள், மாற்றத்தை விரும்பும் இளையோருக்கான காணொலிகள் அவற்றை ஒட்டிய கருத்துப்பரிமாறல்கள் மாணவர்களுக்கு புதிய அனுபவத்தை அளித்தது.



மிக முக்கியமாக குறித்த இளையோரிடமிருந்து வளவாளர்கள் எதிர்பார்க்கும் கருத்துக்கள் , பதில்கள் மாறுதல்கள் சமுதாய சிந்தனைகள் போன்றன தோற்றம் வரும் வண்ணம் அமைந்த நிகழ்வுத் திட்டமிடல்கள் அனைவரையும் பிரமிக்க வைத்தது. மேலும் அவர்களின் திறன்களை வெளிக்கொணரும் விதமாக Talented Show நடாத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இப்பயிற்சியில் ஒழுங்கமைத்த நேர்முகத் தேர்வு புதிய அனுபவமாக இருந்தது மட்டுமன்றி ஒவ்வொரு மாணவரும் தனக்கான சுயவிருத்தி திட்டம் (Self DevelopmentPlan) ஒன்றை வடிவமைத்தமை இப்பயிற்சி நெறியின் சிறப்பை மேம்படுத்தியது எனலாம்.

இப்பயிற்சியானது அனைத்து உலக மருத்துவ நல அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி திரு. சு. கிருஸ்ணகுமார் அவர்களின் நெறிப்படுத்தலில் Vision Global Empowerment - USA அமைப்பின் வளவாளர்கள், வவுனியா வடக்கு கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்வி பணிப்பாளர், மனவளக்கலை பேராசிரியர் மற்றும் ஆசிரியர் பயிற்சி மத்திய நிலைய முகாமையாளர் போன்றோர்கள் வளவாளர்களாக கலந்து கொண்டிருந்தார்கள்.





இப்பயிற்சி நெறியில் ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயம் நாயக்கர் சேனை தமிழ் வித்தியாலயம், அதிபர்களுடன் ஆசிரியர்களும் கலந்து கொண்டு மாணவர்களின் நலன்களை கவனித்து பயிற்சி சிறப்புற நடைபெற உதவி புரிந்தமை பாராட்டுதலுக்குரியது.

# யாழ்ப்பாண மாவட்டத்தில் 20 சதவீதமானவர்களுக்கு சர்க்கரை நோய் வியாதி — நீரழிவு சிகிச்சைப் பிரிவு

யாழ்ப்பாண மாவட்ட நீரழிவு கழகம் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆகியவற்றின் எற்பாட்டில் உலக நீரழிவு தினத்தினை முன்னிட்டு விழிப்புணர்வூட்டும் நடமாடும் இலவச பரிசோதனை சேவை யாழ்ப்பாணம் போதனா வைத்தியாலையின் வெளி நோயாளர் சிகிச்சைப்பிரிவில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நீரழிவுசி கிச்சைப்பிரிவின் நிபுணர் கலாநிதி R.T. அரவிந்தன் தலைமையில் நடைபெற்றது.

நடமாடும் இலவச பரிசோதனை சேவை யினை ஆரம்பித்து வைப்பதற்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் யமுனாந்தா கலந்து கொண்டு நடமாடும் இலவச பரிசோதனை சேவையினை ஆரம்பித்துவைத்தார்.



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நீரழிவு சிகிச்சைப்பிரிவின் நிபுணர் கலாநிதி R.T. அரவிந்தன் கருத்து தெரிவிக்கையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் 20 சதவீதமானவர்களுக்கு நீரழிவுதொற்று நோய் காணப்படுகின்றது. மேலும் கடந்த இரண்டு வருடங்களாக கொரோனா தொற்றுகாலத்தில் இளைஞர்கள் மட்டத்தில் நீரழிவு நோய் அதிகரித்து காணப்பட்டுள்ளது. இதில் தற்போது 35,000 மேற்பட்டவர்கள் சிகிச்சை பெறுகின்றனர். நீரழிவை முற்றாக குணப்படுத்துவோம். நீரழிவால் பேரழிவு வேண்டாம் என்று குறிப்பிட்டார்.



இதில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பதவிநிலை வைத்தியர்கள், நீரழிவு சிகிச்சைப்பிரிவின் வைத்திய குழாமினார்கள், மருத்துவபீட மாணவர்கள், யாழ்ப்பாண மாவட்ட நீரழிவு கழகத்தின் தலைவர் மைக்கல் டெபோட் மற்றும் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# 24 மணிநேர பொதுமக்கள் சேவை வடக்கில் மந்தகதி



வடமாகாணத்தைப் பொறுத்தவரை ஆளுநர் பொதுமக்கள் சேவை வினைதிறனாக இல்லை என்பது பலரது கருத்தாக உள்ளது.

வடக்கு ஆளுநரின் பொதுமக்கள் சேவை ஒவ்வொரு புதன்கிழமையும் இடம் பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்ட நிலையிலும் பெரும்பாலான புதன்கிழமைகள் ஏதோ ஒரு காரணத்தை கூறி நிறுத்தப்படுவதாக கூறப்படுகிறது.

பொது மக்கள் புதன்கிழமைகளில் சேவை இடம் பெறும் என ஆளுநர் செயலகத்துக்கு வருகை தரும் சந்தர்ப்பங்களில் இன்று சேவை இடம்பெறாது தொலைபேசி மூலம் அறிந்து விட்டு வாருங்கள் என திருப்பி அனுப்பப்படும் சம்பவங்கள் இடம் பெறுகிறது.

அது மட்டும் அல்லாது ஆளுநர் செயலக தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளும்போது ஆளுநரை சந்திப்பதற்கான திகதி நேரம் தருமாறு கேட்கப்பட்டாலும் தொலைபேசி இலக்கத்தை தாருங்கள் அழைப்பு எடுக்கிறோம் என கூறியும் இதுவரை அழைப்பு கிடைக்கவில்லை என்பது பலருடைய குற்றச்சாட்டாக உள்ளது.

# இளைஞர்களின் கோரிக்கை தொடர்பில் ஆராய்வதோடு, எழுத்து மூல கோரிக்கைகள் நிச்சயம் பரிசீலிக்கப்படும் – இளவாலையில் வட மாகாண ஆளுநர் அறிவிப்பு



இளைஞர்களின் கோரிக்கை தொடர்பில் ஆராய்வதோடு, அவர்களோடு இணைந்து பணியாற்ற விரும்புவதாக வட மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவிக்கின்றார்.

யாழ்ப்பாணம் இளவாழை புனித ஹென்றி அரசர் கல்லூரியில் தீபாவளி தினத்தன்று, இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட நிகழ்வில் கலந்துகொண்ட போதே கௌரவ ஆளுநர் இதனை கூறினார்.

சங்கத்தின் பத்தாம் ஆண்டு நிறைவையொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட விசேட நிகழ்வின் பிரதம அதிதியாக வட மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்து சிறப்பித்தார். இளவாழை வாலிபர் சங்கத்தினரால் பல கோரிக்கைகள் இதன்போது கௌரவ ஆளுநரிடம் முன்வைக்கப்பட்டன. அவற்றை பரீசீலித்து தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என ஆளுநர் குறிப்பிட்டார்.

இதேவேளை பொதுத் தேவைகள் தொடர்பில் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என வட மாகாண கௌரவ ஆளுநர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் இளவாலை வாலிபர் சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் தனது வாழ்த்துக்களை தெரிவித்ததோடு, சமூக முன்னேற்றத்திற்கு இளைஞர் சங்கத்தின் பங்களிப்பு அவசியம் தேவை எனவும் வட மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் வலியுறுத்தினார்.





# எங்களையும் உயிருடன் விடுவிக்க வழிவகுங்கள் – 28 ஆண்டுகளாக சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை!



கடந்த 2006 ஆகஸ்ட் 14ஆம் திகதி, இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மீது நடாத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் கைதுசெய்யப்பட்டு, 16ஆண்டுகளாக விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ் அரசியல் கைதிகளை, "நிரபராதிகள்" எனத் தெரிவித்த கொழும்பு மேல் நீதிமன்றம் அவர்களை 10.11.2023 அன்று விடுதலை செய்துள்ளது.

அதாவது, குறித்த வழக்கில், மாத்தளையை சேர்ந்த குடும்பஸ்தரான சுப்பிரமணியம் சுரேந்திரராஜா சார்பில், சட்டத்தரணிகள் திரு. தணுக்க நந்தபுரீ, S. அனுஷாங்கன் மன்றில் முன்னிலையாகி, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் அடிப்படையில் துன்புறுத்திப் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை தனது வாதாட்டத்தின் மூலம் வலுவிழக்கச் செய்திருந்தார். அதேவேளை, முல்லைத்தீவைச் சேர்ந்த கனகரத்தினம் ஆதித்தனுக்கு ஆதரவாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராஜாவும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோகராஜா நிரோஜன் சார்பில், முன்னால் நீதிபதியான சிரேஷ்ட சட்டத்தரணி கனகா சிவபாதசுந்தரம் அவர்களும் முன்னின்று வழக்கினை திறம்பட நெறிப்படுத்தியுள்ளனர்.

ஒரு சந்தேகநபரை "நிரபராதி" என நிருபிப்பதற்கு எமது நாட்டில் 15 ஆண்டுகள் எடுத்துள்ளதென்பது உண்மையில் கவலைதரும் விடயமே. இருப்பினும், மிகநீண்டகாலங்களாக துன்பங்களை மாத்திரமே அனுபவித்துவந்த இவர்கள் விடுதலைபெற்று அவர்தம் குடும்பங்களுடன் இணைந்துள்ளமை பெருமகிழ்ச்சியை தருகிறது.

இவர்கள் விடுதலையாகி வருகின்றபோது, அங்கு சிறையில் மீதமிருக்கும் எமது உறவுகள், "எங்களையும் உயிருடன் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்!" எனக்கூறி விழிகலங்க வழியனுப்பி வைத்துள்ளனர்.

ஆகவே, இதேபோன்று, மேலும் சந்தேகநபர்களாக நீண்டகாலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு அரசியல் கைதிகளும் காலதாமதமின்றி விடுவிக்கப்படவேண்டும்.

அத்துடன், 15 முதல் 28 ஆண்டுகளாக தடுத்துவைக்கப்பட்டுள்ள தண்டனைக் கைதிகள் 10பேரையும், கௌரவ ஜனாதிபதி அவர்கள் பொதுமன்னிப்பளித்து விடுவித்து அவர்களது எஞ்சியுள்ள வாழும் காலத்தையேனும் மெய்யுறுதி செய்ய அவர்களை உயிர்ப்புடன் விடுவிக்க வேண்டுமென, ஒரு மனிதநேய அமைப்பாக நாம் வினயமுடன் வேண்டுகை செய்கின்றோம்.

எவ்வாறாயினும், கடந்த பல வருடங்களாக தமிழ் அரசியல் கைதிகளின் பொது நன்மைக்கென்று குரலுயர்த்தி வருகின்ற "குரலற்றவர்களின் குரல்" அமைப்பானது, மீதமுள்ள 14 தமிழ் அரசியல் கைதிகளினதும் விடுதலை வாழ்வு மெய்ப்படும் வரையில், நடைமுறைக்கு சாத்தியமான அனைத்து வழிகளிலும் தளர்வுறாது செயற்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.



# கண்டாவளை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டி "சர்வதேச மாற்று திறனாளிகள் தின நிகழ்வு"




சர்வதேச மாற்று திறனாளிகள் தின நிகழ்வு கண்டாவளை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

சர்வதேச மாற்று திறனாளிகள் தினத்தை முன்னிட்டு குறித்த நிகழ்வு கண்டாவளை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

கண்டாவளை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் க.சத்தியஜீவிதா கலந்து கொண்டிருந்தார்.

குறித்த நிகழ்வில் சமூக சேவை உத்தியோகத்தர்கள், மாற்றுத் திறனாளிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது மாற்றுத்தினாளிகளிடையே நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.







# வலி. மேற்கு பிரதேச சபையினால் வாய்க்கால் தூர்வாரல்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் அராலி மத்தி குமுக்கன் வாய்க்கால் தூர்வாரப்பட்டது.

அடை மழை காரணமாக குடிமகனைகளுக்கு தேங்கி நிற்கும் வெள்ளநீர் வடிந்தோட முடியாது காணப்பட்டது.

இந்நிலையில் குறித்த வாய்க்கால் 16-11-2023 அன்றையதினம் தூர்வாரப்பட்டது. இதனை வலி. மேற்கு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கந்தையா இலங்கேஸ்வரன் மேற்பார்வை செய்தார்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# கல்வித் தகைமையுடன் தொழில் தகைமையும் இருந்தால் மட்டுமே சவால்களை வெற்றிகொள்ள முடியும் – வட மாகாண ஆளுநர் தெரிவிப்பு







சவால்மிகுந்த, போட்டிதன்மையான தற்காலத்தில் கல்வித் தகைமையுடன் தொழில் தகைமையும் இருந்தால் மட்டுமே வாழ்வில் வெற்றியடைய முடியும் என வட மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவிக்கின்றார். யாழ்ப்பாணம் சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் இன்று நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்துக்கொண்டு உரையாற்றிய போதே கௌரவ ஆளுநர் இதனை குறிப்பிட்டார்.





வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் நடாத்தப்படும் மனைபொருளியல் டிப்ளோமா சான்றிதழ் பயிற்சி நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த 257 மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் இன்று நடைபெற்றது. வட மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், வட மாகாண பிரதம செயலாளர், வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் , ஏனைய திணைக்களங்களின் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துக் கொண்டனர்.

இந்நிகழ்வின் பிரதம அதிதிக்கான உரையை நிகழ்த்திய வட மாகாண ஆளுநர், தொழில்கல்வியின் முக்கியத்துவம் குறித்து தெளிவுப்படுத்தினார். பல்தேசிய போட்டிதன்மையான நிறுவனங்களில் தொழில்வாய்ப்பை எதிர்பார்க்கும் அனைவரும் கல்வி தகைமையுடன் தொழில் தகைமையும் பெற்றிருந்தால் மாத்திரமே, சவால்களுக்கு மத்தியில் சிறந்த இலக்கை அடைய முடியும் என இதன்போது ஆளுநர் தெரிவித்தார்.

மனைபொருளியல் டிப்ளோமா சான்றிதழ் பயிற்சி நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த மாணவிகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்த கௌரவ ஆளுநர், தொழில் தகைமையை மேலும் வளர்த்துக் கொள்வதற்கான ஆளுமையை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.

# மன்னார் தீவக பகுதிக்குள் முன்னெடுக்கப்படும் கனிய மணல் அகழ்வை தடுப்பதற்கு முழு முயற்சி எடுப்போம் – பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்



- மன்னார் நிருபர் (16.11.2023)

மன்னார் மாவட்டத்தில் குறிப்பாக மன்னார் தீவுக்குள் அவுஸ்திரேலியாவை சேர்ந்த நிறுவனம் ஒன்று மணல் அகழ்வில் ஈடுபடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அந்த அமைப்பு என்ன முயற்சிகளை மேற்கொண்டாலும் மன்னார் மக்களும், மக்கள் பிரதிநிதிகளும், சமூக அமைப்புக்களும் மணல் அகழ்வை தடுப்பதற்கான முழு முயற்சியையும் எடுப்போம் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் தமிழரசு கட்சி அலுவலகத்தில் 15-11-2023 நடைபெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் குறிப்பாக மன்னார் தீவு பகுதிக்குள் கனிய மணல் அகழ்வு தொடர்பாக கடந்த இரண்டு மூன்று வருடங்களாக அவுஸ்திரேலியாவை சேர்ந்த நிறுவனம் ஒன்று இங்கு அகழ்வு பணியை மேற்கொள்வதற்கான முயற்சியை மேற்கொண்டு வருகின்றது.

இது தொடர்பாக நாங்கள் தொடர்ச்சியாக எங்களுடைய எதிர்ப்பை காண்பித்து வருகின்றோம். இந்த நிலையில் அண்மையில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அமைச்சின் அழைப்பின் பேரில் பல்துறைகளை சேர்ந்த அதிகாரிகள் மன்னார் தீவு பகுதிக்குள் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டதாக அறிந்தோம். அன்று பாராளுமன்ற தினம் என்பதால் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று எங்களுடைய எதிர்ப்பை தெரிவிக்க முடியாத சூழ்நிலை இருந்தது.

அதே நேரம் அன்றைய நாள் நான் பிரதேச செயலாளரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மன்னார் தீவினுடைய நிலப்பரப்பும் மன்னார் கடல் நிலப்பரப்பின் அமைவும் சம அளவாக இருப்பதால் இங்கு அகழ்பணி மேற்கொண்டால் தீவு அழிந்து போகும். எனவே வந்திருக்கும் அதிகாரியிடம் இதை தெரிவிக்கும் படியும் இங்கே அகழ்வு பணியை மேற்கொள்ள மாவட்ட அபிவிருத்தி குழுவின் அனுமதி கிடைக்காது எனவும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பு இருப்பதால் இதை நடைமுறைப்படுத்த முடியாது என்ற தகவலை அதிகாரிகளிடம் தெரியப்படுத்துமாறு தெரிவித்திருந்தேன்.

இதற்கு அடுத்த நாள் நேரடியாக நான் கொழும்பில் வடமாகாண ஆளுநரை சந்தித்து இந்த மணல் அகழ்வு தொடர்பாகவும் மணல் அகழ்வுக்கான ஆய்வு தொடர்பாகவும் எனது 100 வீத எதிர்ப்பை தெரிவித்த போது ஆளுநர் அதற்கு இணங்கி இருந்தார்.

மன்னார் தீனுடைய நில அமைப்பை பொறுத்தவரையில் இங்கு ஆராய்ச்சி. அகழ்வு மேற்கொண்டால் எதிர் காலத்தில் மன்னார் தீவு அழிவதற்கு வாய்ப்பாக இருக்கும் என ஆளுநர் ஏற்றுக் கொண்டார்.

எனவே இந்த முயற்சியை இந்த நிறுவனம் கைவிட வேண்டும் அரசாங்கத்துக்கும் தொடர்ச்சியாக நாங்கள் கூறி வருகிறோம். எங்களுடைய தீவு பகுதிக்குள் எந்த விதமான ஆராய்ச்சியோ அகழ்ப்பணியோ மேற்கொள்ள வேண்டாம் என்பதை மீண்டும் மீண்டும் அரசாங்கத்திற்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நீங்கள் எவ்வளவு முயற்சி எடுத்தாலும் அங்குள்ள மக்களும் மக்கள் பிரதிநிதிகளும் சமூக அமைப்புகளும் இந்த கனிய மணல் அகழ்வை தடுப்பதற்கான முழு முயற்சியும் எடுப்பார்கள் என அவர் தெரிவித்தார்.

# கடும் மழைக்கு மத்தியிலும் கட்டுவனில் கொள்ளை முயற்சி – முகமூடி கழன்றதால் தப்பியோடிய கொள்ளையர்கள்

தெல்லிப்பழை, கட்டுவன் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள ஊறான் கூடையில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளையர்கள் மூன்று பிள்ளைகளுடன் தனிமையில் வசித்த பெண்ணைத் தாக்கிக் கொள்ளையிடவும், அவரைக் கொலை செய்யவும் முயன்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நள்ளிரவு 12 மணியளவில் நடந்துள்ளது. மழை பெய்து கொண்டிருந்த நேரத்தில் முகமூடி அணிந்து, கைகளுக்கு கையுறை அணிந்து கொள்ளையர்கள் வீட்டுக்குள் நுழைந்துள்ளனர்.

மறைந்திருந்த கொள்ளையர்கள் இயற்கை உபாதைக்குச் சென்ற பெண்ணின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டிக் கொள்ளையிட முயன்றுள்ளனர்.

பெண்ணை வீட்டுக்குள் கொண்டு செல்ல முயன்றபோது, பெண் கொள்ளையர்களுடன் முரண்பட்டுத்தன்னைக் காப்பாற்ற முயன்றுள்ளார். அப்போது கொள்ளையிட வந்தவர்களில் ஒருவரின் முகமூடியை அகற்றி பெண் அவர்களை இனங்கண்டுள்ளார்.

அதையடுத்து பெண்ணை அவர்கள் கொல்ல முயன்றுள்ளனர். ஆயினும் பெண் அவர்களிடம் இருந்து ஒருவாறு தப்பித்து வீட்டுக்குள் ஓடியுள்ளார். முகமூடி கழன்றதை அடுத்து கொள்ளையர்களும் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

கழுத்தில் காயங்களுக்குள்ளான குடும்பப் பெண் தெல்லிப்பழை மருத்துவ மனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, ஒரு வாரத்துக்கு முன்னர் அந்த வீட்டில் இருந்த எரி வாயு சிலிண்டர் திருடப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழகத்திற்கு அகதியாக சென்று மீண்டும் நாடு திரும்பியவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

தமிழ்நாட்டில் அகதிகளாக தஞ்சமடைந்து 33 ஆண்டுகளின் பின்னர் சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக தாயகம் திரும்பிய வடமராட்சி கிழக்கு, குடத்தனையை சேர்ந்த மூவரின் விளக்கமறியலை பருத்தித்துறை நீதிவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை நீடித்து உத்தரவிட்டுள்ளார்.

போர் காரணமாக குடத்தனை வடக்கைச் சேர்ந்த சின்னராஜா நாகேஸ்வரி (வயது-58), அவரது மகளான சின்னராஜா சுதர்சினி (வயது-42) மகனான சின்ன ராஜா சுதாகரன் (வயது-39) ஆகியோர் 1990 ஆம் ஆண்டு தமிழ்நாட்டுக்குச் சென்றிருந்தனர்.

தற்போது படகு மூலமாக தாயகம் திரும்பி குடத்தனை பகுதியில் உள்ள உறவினர் வீடு ஒன்றில் தங்கி இருந்தபோது பருத்தித்துறை பொலிஸாரால் கடந்த மாதம் 10 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் பருத்தித் துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, அவர்களின் விளக்கமறியலை நீதி மன்றம் நீடித்தது.


## House for Sale in Srilanka


Single Family - Bungalow House
Lot Size: 10 perches / 2722.5 Sq.ft.
Floor Area: 1530 sq.ft
Location: Kattuwa, Negombo (30 mins drive from Bandaranayaka International Airport)
Year built: 2016

Interior: Fully tiled and fully furnished. Living and sitting rea. 2 full bathrooms. 1 Master bedroom with ensuite. 2 bedrooms. Kitchen.
Exterior: Porch (tiled with timber look tiles). Front garden space. Outdoor kitchen with 4 burner glass stove top (open kitchen concept). Interlock paving - walkways on 3 sides.
Appliances: Solar power on grid (on roof). A/C (master bedroom). Double Door Fridge. TV with stand (32"). 4 burner glass stove top (outdoor kitchen)

Contact: 306 470 0204

# நினைவு நாட்களும் கொண்டாட்டங்களும்

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



தீபாவளி தினத்தன்று,யாழ் பண்ணை வெளியில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடினார்கள். வழமையாக வார இறுதி நாட்களிலும் விடுமுறை நாட்களிலும் அவ்வாறு ஜனங்கள் கூடுவதுண்டு. ஆனால் தீபாவளி தினத்தன்று விசேஷமாக ஜனங்கள் கூடினார்கள். கொழும்பை மையமாகக் கொண்ட "தயா ரேடிங் கொம்பனி" என்று அழைக்கப்படும் ஒரு நிறுவனம் யாழ். பண்ணை வெளியை நிர்வகிப்பதற்கான கொன்ட்ராக்டை மாநகர சபையிடமிருந்து பெற்றபின், அப்பகுதி களைகட்டத் தொடங்கி விட்டது.அங்கு வண்ண விளக்குகள் பொருத்தப்பட்டு, சிறிய சிறிய கடைகள் திறக்கப்பட்டு, அப்பகுதி ஒரு பொழுது போக்கு வெளியாக மாற்றப்பட்டிருக்கிறது.

ஒருபுறம் பண்ணை வீதியில், மண்டை தீவு வரையிலும் தம் உடல் எடையைக் குறைப்பதற்காக நடக்கும் ஆண்களும் பெண்களும். இன்னொரு புறம் கடற்கரையில் பொழுதுபோக்க வரும் மக்கள். இப்படியாக அந்தப் பகுதி வார இறுதி நாட்களில் ஜனத் திரளாகக் காணப்படும். விஷேசமாக தீபாவளி தினத்தன்று அங்கு வழமையை விட அதிகமாக ஜனங்கள் கூடினார்கள்.

பண்ணை வெளியில், மட்டுமல்ல யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகே உள்ள பழைய பூங்கா இப்பொழுது புதிய பூங்காவாக மாற்றப்பட்டிருக்கிறது. பழைய பூங்காவை அழித்தமை என்பது ஒரு மரபுரிமைப் படுகொலை. அதைத் தனியாக ஆராய வேண்டும். அதேசமயம் புதிய பூங்காவில் அப்பகுதியைச் சேர்ந்த பெருந் திரளானவர்கள் மாலை வேளைகளில் கூடுவார்கள்.

யாழ்ப்பாணத்தில் அவ்வாறான கடற்கரைகள், பொழுது போக்கும் இடங்களை நோக்கிக் குவியும் மக்களின் தொகை அதிகரித்து வருகின்றது. இயக்கச்சியில், நாவற் குழியில், பூநகரியில் என்று பல்வேறு இடங்களிலும் அவ்வாறு பொழுது போக்கு மையங்கள், உல்லாச பயணத்தலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மக்கள் ஓய்வு கிடைக்கும் நாட்களில் அப்பகுதிகளை நோக்கிக் குவிகிறார்கள்.

தாயகத்தில் மட்டுமல்ல, புலம்பெயர்ந்த மக்கள் மத்தியிலும் கொண்டாட்டங்களுக்கும் விருந்துகளுக்கும் குறைவில்லை. புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒருவிதத்தில் தாயகத்தின் நீட்சிதான். அதே சமயம் தாயகத்தின் அரசியற் பொருளாதார ராணுவச் சூழ்நிலையும் புலம்பெயர்ந்த நாடுகளின் சூழ்நிலையும் ஒன்றல்ல. 2009க்குப் பின் உடனடுத்து வந்த ஆண்டுகளில் தமிழ் மக்களின் சுதந்திரத்திற்கான போராட்டத்தின் அஞ்சலோட்டக் கோல் புலம்பெயர்ந்த தமிழர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்ற ஒரு தோற்றம் எழுந்தது. இன்றுவரையிலும் தோல்வியை ஒப்புக் கொள்ளாத ஒரு சமூகமாக, புலம்பெயர்ந்த தமிழ் சமூகம் ஆங்காங்கே எதிர்ப்பைக் காட்டி வருகின்றது. ஆனால் அதற்காக புலம் பெயர்ந்த தமிழர்கள் ஆண்டு முழுவதும் போராடிக்கொண்டிருக்க வேண்டும், ஆண்டு முழுவதும் துக்கப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும், ஒரு நினைவு நாளையும் விடாமல் அனுஷ்டிக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது.

அண்மையில் கனடாவில் நடந்த சிட் சிறீராமின் இசை நிகழ்ச்சிக்காக இலங்கைக் காசில் பல கோடி ரூபாய்கள் புரண்டன. கனடாவில் மட்டுமல்ல புலம்பெயர்ந்த தமிழர்கள் தாம் வாழும் நாடுகளில் பொழுதுபோக்கிற்காக அடிக்கடி இந்தியக் கலைஞர்களை அழைத்து நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி வருகிறார்கள். இந்த நிகழ்ச்சிகளில் புரளும் பணத்தின் தொகை பிரம்மாண்டமானது. இலங்கை காசில் அது மிகப்பெரிய முதலீடு. புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழ்க்கையைக் கொண்டாடுகிறார்கள். சந்தோஷமாக இருக்கிறார்கள். அதைப் பார்த்துவிட்டுத்தான் நாட்டிலிருந்து ஒரு தலைமுறை இப்பொழுது வேகமாகப் புலம்பெயர்ந்து வருகின்றது.

அதே சமயம் நினைவு நாட்களை விமரிசையாக அனுஷ்டிப்பதும் புலம்பெயர்ந்த தமிழர்கள்தான். நீதிக்கான போராட்டத்தில் தீவிரமாக செயல்படுவதும் புலம்பெயர் தமிழர்கள்தான். இதை எப்படி விளங்கிக் கொள்வது?

புலம் பெயர்த்து வாழும் களச் சூழல் வேறு. தாயகக் களச் சூழல் வேறு. தாயகத்தில் நீதிக்காகப் போராடும் ஒரு மக்கள் கூட்டம் புலன்களை அடக்கி, சுகபோகங்களைத் துறந்து போராடினால் அந்த போராட்டம் உன்னதமானதாகவும் வேகமானதாகவும் இருக்கும் என்பதில் மறு கருத்துக்கு இடமில்லை. தியாகத்தின் அளவே போராட்டத்தின் வேகத்தைத் தீர்மானிக்கின்றது. ஆனால் அது யுத்த காலத்தில் இருந்தது போல இப்பொழுது இருக்காது என்பதுதான் இங்குள்ள பிரச்சினை. யுத்த காலத்தில் வாழ்க்கை நெருக்கடியானதாக இருக்கும். சமூகம் காவலரண்களால் மூடப்பட்டிருக்கும். அக்காலகட்டத்தில் கொண்டாட்டங்களுக்கு அடிப்படையான வரையறைகள் இருக்கும். ஆனால் ஆயுத மோதல்கள் இல்லாத ஒரு சமூகத்தில் குறிப்பாக, யுத்த வெற்றிகளின் மூலம் திறந்து விடப்பட்டிருக்கும் ஒரு சமூகத்தில் நிலைமை வேறாக இருக்கும். அதிலும் குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் நிலைமை தாயகத்துக் கள யதார்த்தத்துக்குப் புறத்தியானதாகவே இருக்கும்.

எனவே இங்கு கள தார்த்தங்களைக் கவனத்தில் எடுக்க வேண்டும். போர் வெற்றிகளின் மூலம் திறந்து விடப்பட்ட ஒரு சமூகத்தை யார் யாரோ கவரப் பார்க்கின்றார்கள். யார் யாரோ வழிநடத்தப் பார்க்கின்றார்கள். யார் யாரோ தங்களுடைய நிகழ்ச்சி நிரல்களின் கீழ் இழுத்துக் கொண்டு போக பார்க்கின்றார்கள். அந்த மக்களை நீதிக்கான போராட்டத்தில் ஒரு மையத்தில் குவிப்பதற்கு அரசியல் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் மேலும் தீவிரமாக உழைக்க வேண்டியிருக்கிறது என்பதைத்தான் அண்மைக்கால நிலைமைகளும் அவற்றின் மீதான விவாதங்களும் நமக்கு உணர்த்துகின்றன.

கலைஞர்கள் படைப்பாளிகளுக்கு கட்டளையிடும் கலாச்சார போலீசாரை "கலாச்சார கொமிசார்கள்" என்று பகிடியாக அழைப்பதுண்டு. கொமிசார் என்ற பதவி நிலை ரஷ்ய புரட்சியின் பின் ரஷ்ய ஆட்சிமுறையில் காணப்பட்டது. இப்பொழுது தமிழ்ச் சமூகத்திலும் தங்களைத் தாங்களே கலாச்சாரக் கொமிசார்களாக பிரகடனப்படுத்திக் கொண்டவர்களும் தங்களை தாங்களே ஆயுதப் போராட்டத்தின் வாரிசுகளாகப் பிரகடனப்படுத்தி கொண்டவர்களும் அதிகரித்து வருகிறார்கள். சமூக வலைத்தளங்கள் அவர்களுக்கு வசதியான மேடைகளை அமைத்துக் கொடுக்கின்றன. பாதுகாப்பான இறந்த காலத்தை பெற்றவர்களெல்லாம் நிகழ்காலத்தின் பேச்சாளர்களாக மாறிவிட்டார்கள். அசிங்கமான, அருவருப்பான சொந்த வாழ்க்கைப் பின்னணியைக் கொண்ட பலர் சமூக வலைத்தளங்களில் கலாச்சாரக் காவலர்களாகப் பூதக்கண்ணாடிகளோடு திரிகிறார்கள். சில பாடசாலைகளில் ஆசிரியர் தினக் கொண்டாட்டங்கள் மற்றும் அதுபோன்ற ஏனைய கொண்டாட்டங்களில் சினிமாப் பாட்டுக்கு ஆசிரியர்கள் ஆடுவதை ஒரு குற்றமாகக் காட்டுகிறார்கள்.

ஆனால் தமிழ்ச் சினிமாவில் இருந்து தமிழ் மக்களின் வாழ்க்கையை பிரித்துப் பார்க்க முடியுமா? அப்படி என்றால் கேபிள் தொலைக்காட்சிகளையும் ஏனைய சற்ற லைற் தொலைக்காட்சிகளையும் இழுத்து மூட வேண்டும். ஈரானில் அப்படித்தான் நிலைமை இருந்தது. அண்மையில் நேபாளம் சீனாவின் கைபேசிச் செயலி ஒன்றைத் தடை செய்தது. சீனாவும் அதுபோல மேற்கத்திய நாடுகளை மையமாகக் கொண்ட இலத்திரனியல் செயலிகளை தடை செய்திருக்கிறது.

தமிழ் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக சினிமா எப்பொழுதோ மாறிவிட்டது. எனவே ஆட்டம் பாட்டம் என்று வரும் பொழுது சினிமாப் பாடல் தான் வரும். பதிலுக்கு வேறு பாடல்களை நாட்டில் யாராவது தயாரிக்கின்றார்களா? இல்லையே. இதுதான் பிரச்சினையே.

பொதுவாக ஜெனரஞ்சகமானது புத்திசாலித்தனமானதாக இருப்பதில்லை. அதற்கு மிகக் கூர்மையான ஒரு உதாரணத்தை இங்கு எடுத்துக் காட்டலாம். தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் மணிவண்ணனும் அவரைப் போல சிந்திக்கும் ஈழ அபிமானிகளும் இணைந்து ஒரு கட்டமைப்பை உருவாக்கி, அதன் மூலம் சில இணையச் சந்திப்புகளை ஒழுங்குபடுத்தினார்கள். அவ்வாறு நிகழ்த்தப்பட்ட ஒரு சூம் சந்திப்பின் காணொளி யூ டியூப்பில் இப்பொழுதும் இருக்கிறது. ஆனால் அந்தக் காணொளியை பார்த்தவர்களின் எண்ணிக்கை 1002 ஐத் தாண்டவில்லை.

சீரியசானதை புறக்கணிக்கின்ற, அல்லது ஜனரஞ்சகமானதை நோக்கி எடுபடுகின்ற ஒரு போக்கு தமிழ் சமூகத்தில் எப்பொழுதும் இருந்தது. இப்பொழுது அரசியல் தலைமைத்துவம் இல்லாத வெற்றிடத்தில், பண்பாட்டுத் தலைமைத்துவம் இல்லாத வெற்றிடத்தில், மதத்தின் இடத்தை தொழில்நுட்பம் கைப்பற்றியிருக்கும் ஒரு காலகட்டத்தில், தமிழ் மக்களை தேசமாக திரட்டுவதற்குரிய எந்த ஒரு கட்டமைப்பும் இல்லாத வெற்றிடத்தில், தமிழ்ப் பொதுப் புத்தியை கவர்ந்திழுப்பதற்கு பலரும் முயற்சிக்கிறார்கள்.

சினிமா ஜனரஞ்சகமானது. குறிப்பாக தமிழ் வணிக சினிமா ஒரு கனவுத் தொழிற்சாலை. அங்கு உற்பத்தி செய்யப்படும் கனவுகள் பொதுப் புத்தியை அவமதிப்பவைபொதுப் புத்தியைத் திசை திருப்புபவைபொதுப் புத்தியை பிழையாக வழிநடத்துபவை. எனவே, பொதுப் புத்தி எவ்வாறு சிந்திக்க வேண்டும்? செயல்பட வேண்டும்? என்று விரும்புகின்றவர்கள் அப்பொதுப் புத்தியை வசப்படுத்தும் கலை இலக்கிய வடிவங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். பரவலாக்க வேண்டும்.

பூகோள மயமாதலுக்கு எதிராக, உள்ளூர்ப் பண்பாட்டை; உள்ளூர்ப் பழக்க வழக்கங்களை; உள்ளூர் உணவை; உள்ளூர் வழிபாட பலப்படுத்த வேண்டும். ஆனால் அவ்வாறெல்லாம் சிந்தித்து பொது புத்தியை வழிநடத்தத் தக்க கட்சிகளோ கலை பண்பாட்டு அமைப்புகளோ தமிழ் மக்கள் மத்தியில் உண்டா? இல்லையே. பொது புத்தியை வழிநடத்துவது என்றால் முதலில் பொதுவான ஒரு கட்டமைப்பு வேண்டும். அது பலமான கட்டமைப்பாகவும் இருக்க வேண்டும். பொதுப் புத்தி எப்பொழுதும் பொழுதை எப்படிச் சந்தோஷமாகப் போக்கலாம் என்றுதான் சிந்திக்கும். ஆனால் அந்த சமூகத்துக்கு வழிநடத்துபவர்கள்தான் பொது புத்தியை சீரியஸானதின் மீதும் உன்னதமானவைகளின் மீதும் நாட்டம் கொள்ளச் செய்யவேண்டும்.

அதாவது, கைபேசிச் செயலிகளின் காலத்தில், பொழுதுபோக்கிகளின் காலத்தில், செயற்கை நுண்ணறிவின் காலத்தில்எப்படித் தேசமாகத் திரள்வது என்று சிந்திப்பது. அதற்கு கலையை எப்படி ஒரு கருவியாகப் பயன்படுத்துவது என்று சிந்திப்பது.

-------------------------------------------------



கனடிய செய்திகள்
Canadian News

# ஒன்றாரியோ அரசின் GO ட்ரான்ஸிட் நிறுவனம் அதன் முதல் "தீபாவளி ரயில்" மூலம் தீபாவளியைக் கொண்டாடியது

## GO Transit Celebrates Diwali with its first ever 'Diwali Train'



உலகெங்கும் வாழ் இந்துக்களிதன் தீபாவளியைக் கொண்டாடும் வகையில், கனடா ஒன்றாரியோ மாகாண அரசின் GO ட்ரான்ஸிட் நிறுவனம் ஒரு அற்புதமான அனுபவப் பிரச்சாரத்தை நடத்தி வருகிறது.இதற்காக முதன்முறையாக "GO தீபாவளி ரயில்" ஐயும் அறிமுகம் செய்துள்ளது

நவம்பர் 10 முதல் 15 வரை, வாடிக்கையாளர்கள் GO தீபாவளி ரயிலில் கிச்சனர் லைனில் தீபாவளியின் மகத்துவத்தை உள்ளடக்கி உள்ளேயும் வெளியேயும் பிரகாசமான தீபாவளி வண்ணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. உற்சாகமான பாலிவுட் நடனக் கலைஞர்கள், பாரம்பரிய இசையின் மெல்லிசை ஒலிகள், உற்சாகமான கொண்டாட்டக் கொடுப்பனவுகளுடன், உற்சாகமான, அழைக்கும் சூழ்நிலையால் வாடிக்கையாளர்கள் வரவேற்கப்படுவார்கள். இந்த நவம்பர் 10 முதல் 15 வரை விழாக்களுக்குச் செல்ல முடியாதவர்கள். கிரேட்டர் கோல்டன் ஹார்ஸ்ஷு [Greater Golden Horseshoe (GGH)] முழுவதும் நவம்பர் 26 வரை அழகாக அலங்கரிக்கப்பட்ட மேற்படி GO தீபாவளி ரயிலை வாடிக்கையாளர்கள் கண்டு களிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தீமையின் மீது நன்மையின் வெற்றியைக் குறிக்கும் ஒளியின் திருவிழா தீபாவளி. மேலும் இந்த கொண்டாட்டத்தில் பிரியமானவர்களுடன் இணைவதற்கான இந்தப் பயணம் முக்கிய பங்கு வகிக்கிறது. பயணத்தை இன்னும் சிறப்பானதாக்க உதவ, வாடிக்கையாளர்கள் GO ட்ரான்சிட்டின் மலிவு விலையில் $10 GO வார இறுதி பாஸ், ஆக $30 இல் தொடங்கும் கிழமை நாட்களில் பயன்படுத்தக்கூடிய பாஸ்கள் மற்றும் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பயணம் செய்ய GO புகையிரத சேவையை இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தீபாவளிக்கு, இதயத்தைத் தூண்டும் மற்றும் நம்பமுடியாத வேடிக்கையான பயணத்தில் GO ட்ரான்ஸிட் நம்பகமான துணையாக இருக்கட்டும். GO தீபாவளி ரயிலில் மகிழ்ச்சி, விளக்குகள் மற்றும் பகிர்ந்து கொள்வதன் உணர்வை அனுபவிக்கவும். இந்த திகைப்பூட்டும் கொண்டாட்டத்தைத் தவறவிடாதீர்கள் என GO ட்ரான்ஸிட் நிறுவனம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்தபுழு தீபாவளி ரயிலில் ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளின் தீபாவளிப் பண்டிகையைப் பற்றிய வாழ்த்துக்கள் மற்றும் விபரங்கள் எழுதப்பட்டுள்ள என்பது குறிப்பிடத்தக்கது.

மெட்ரோலின்க்ஸ் சட்டம், 2006 இன் கீழ் ஒன்டாரியோ அரசாங்கத்தின் ஒரு நிறுவனமான Metrolinx, கிரேட்டர் டொராண்டோ மற்றும் ஹாமில்டன் பகுதியில் உள்ள அனைத்து போக்குவரத்து முறைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் ஒருங்கிணைப்பை மேம்படுத்த உருவாக்கப்பட்டது.

GO ட்ரான்சிட், UP எக்ஸ்பிரஸ் மற்றும் PRESTO ஆகியவற்றை இயக்கும் போது, நீங்கள் சிறப்பாகவும், வேகமாகவும், எளிதாகவும் செல்ல வேண்டிய இடத்தைப் பெறுவதற்கு, ஒன்டாரியோவின் வரலாற்றில் மிக விரிவான போக்குவரத்து முதலீட்டை Metrolinx மேற்கொள்கிறது.

GO டிரான்சிட் என்பது கிரேட்டர் கோல்டன் ஹார்ஸ்ஷுக்கான (GGH) பிராந்திய பொது போக்குவரத்து சேவையாகும். GO இன் தனித்துவமான பச்சை மற்றும் வெள்ளை ரயில்கள் மற்றும் பேருந்துகள் 11,000 சதுர கிமீக்கு மேல் உள்ள ஏழு மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு சேவை செய்கின்றன.

-----------------------------------------------------------------

To celebrate Diwali, the Festival of Lights, GO Transit is running an exciting experiential campaign that will get customers in the festive spirit like never before. Introducing the first-ever 'GO Diwali Train'!

From November 10 to 15, customers can join in on the festivities aboard the GO Diwali Train along the Kitchener line in a Diwali themed coach adorned with vibrant Diwali colours inside and out. Customers will be welcomed by a warm, inviting atmosphere, with lively Bollywood dancers, the melodious sounds of traditional music, and exciting celebratory giveaways to keep the festive energy flowing. Can't make it for the festivities during those dates? Customers can still catch a glimpse of the beautifully decorated GO Diwali Train until November 26 across the Greater Golden Horseshoe (GGH).

Diwali is a festival of light that signifies the triumph of good over evil. It's a magical time of the year that brings families and friends together, and travelling to connect with loved ones plays a key role in this celebration. To help make the trip even more special, customers can take advantage of GO Transit's affordable options, including the $10 GO Weekend Pass, Weekday Group Passes starting at just $30, and of course, kids 12 and under ride GO for free.








This Diwali, let GO Transit be a trusted companion on a heartwarming and incredibly fun journey. Experience the joy, the lights, and the spirit of sharing on the GO Diwali Train. Don't miss out on this dazzling celebration!

About Metrolinx

Metrolinx, an agency of the Government of Ontario under the Metrolinx Act, 2006, was created to improve the coordination and integration of all modes of transportation in the Greater Toronto and Hamilton Area.

Metrolinx is undertaking the most extensive transportation investment in Ontario's history to get you where you need to go better, faster, and easier while also operating GO Transit, UP Express and PRESTO.

GO Transit is the regional public transit service for the Greater Golden Horseshoe (GGH). GO's distinctive green and white trains and buses serve a population of more than seven million across more than 11,000 square km stretching from Hamilton and Kitchener-Waterloo in the west to Newcastle and Peterborough in the East, and from Orangeville and Beaverton in the north to Niagara Falls in the south.

# அவுஸ்திரேலியா வாழ் கலைஞர்கள் மற்றும் நடிக நடிகைகள் என நம்மவர் தயாரிப்பான "யாதும் யாவரும்" என்னும் திரைப்படத்தை வெற்றியடைச் செய்வோம். நமது கலைஞர்களுக்கும் நல்லாதரவு வழங்குவோம்.




மீண்டும் நம்மவர் திரைப்படம் ஒன்று எதிர்வரும் 18-11-2023 மற்றும் 19-11-2023 ஆகிய தினங்களில் கனடாவின் ஸ்காபுறோ நகரின் வுட்சைட் சினிமாவில் நம் தமிழ் மண்ணின் தயாரிப்பாய் திரையிடப்படுகின்றது.

அண்மையில் "பாலை நிலம்" திரைப்படத்தை கண்டு களித்து ஆதரவு வழங்கிய எமது கனடா திரைப்பட ரசிகர்கள் இந்த "யாதும் யாவரும்" என்னும் நம்மவர் திரைப்படத்திற்கும் தங்கள் ஆதரவை வழங்க வேண்டும்.




அவுஸ்த்திரேலியா வாழ் நமது கலைஞர்களும் இதில் நடித்தும் ஏனைய வழிகளில் பங்கெடுத்தும் உள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அற்புதமான குடும்பக் கதை கொண்ட இந்த திரைப்படத்தைக் காணவாருங்கள்.

அனுமதிச் சீட்டுக்களுக்கு சிவர்: (416) 771-8681 அல்லது (416) 771-9286

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ

Acupuncturist (R.A.C)

தொடர்புகொள்ளவும்.


(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5





மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1074

## அனலைதீவு அரிஉறரபுத்திரஐயனார் ஆலயம் அனலைதீவு, யாழ்ப்பாணம

அண்மையில் இறைவனடி சேர்ந்த எனது அன்புக் கணவர் திரு.நடராசன் அவர்கள் அனலைதீவை பிறப்பிடமானவர். அனலைதீவு அரிஉறரபுத்திர ஐயனார்மீது ஆராத பக்தி கொண்டவர். 20 வருடங்களுக்கு மேலாக ஈழத்துத் திருக்கோயில்கள் தொடரா எழுதுவதற்கு அருந்துணை புரிந்தவர். அனலைதீவு அரிஉறரபுத்திரஐயனார் ஆலயத் தொடரை எனது அன்புக்கணவருக்கு, ஆத்மசமர்ப்பணாகச் சமர்ப்பிக்கின்றேன். அவரது ஆத்மா சாந்தி அடையட்டும். ஓம் சாந்தி.

*“ கரந்தைபுனை கண்ணுதலுங் கண்ணன் றானும்*
*களிப்புடனே கலந்துதவு காரி தன்மேல்*
*உரந்தரு பொன்னூஞ்சலிசை ஓதுதற்கு*
*உம்பல்முகத் துடனுதித்தெய் வுலகு முய்யப்*
*புரந்தரன்பூ சனையியற்றப் பொன்னி யாற்றைப்*
*பூங்காவில் வரச் செய்த புனிதன் றன்னை*
*நிரந்தரமா யுயிர்தோறும்தம் நிறைந்து நிற்கும்*
*நின்மலனாய் ஐங்கரன்றாள் நினைகுவாமே. ”*

ஐயனாரைச் சாஸ்தா, மணிகண்டன், தர்மசாஸ்தா எனப் பல திருநாமங்களால் அழைத்து வணங்குவர். அரிஉறரபுத்திரர் எனும் நாமம் அவற்றுள் சிறப்புடையது. அரி என்பது திருமாலையும், அரன் என்பது சிவனையும் குறிக்கும். அரிக்கும், அரனுக்கும் பிறந்தவரே ஐயனார். ஐயனாரின் பிறிதொரு அவதாரமே ஐயப்பன் ஆவார். பல புராணக்கதைககள் இவரது பிறப்பின் மகிமையை உணர்த்துவதாகக் காணப்படுகின்றன. இறைவனுடைய மூர்த்தங்கள் யாவும் அவன் உலகம் உய்யவேண்டி நடத்திய திருவிளையாடல்களை வெளிப்படுத்துவனவாகக் காணப்படுகின்றன. தத்துவங்களை, வாழ்வு நெறிகளை இலகுவில் விளக்கவே புராணக்கதைகள் பெரிதும் உதவுகின்றன. இந்துமதத்தில் மட்டுமன்றி எல்லா மதங்களிலும் புராணக்கதைகள் இடம்பெற்றுள்ளன. அவ்வாறே ஐயனாருடைய தோற்றமும் உலகை அழிவினின்றும் காத்து நல்வழிப்படுத்தி, தீயவர்களை அழிப்பதையே நோக்கமாகக் கொண்டு நடைபெற்றுள்ளது.

ஐயனாருடைய அவதாரமகிமையும் மேலோட்டமாகப் பார்க்கும்போது, நடைமுறைக்கு அப்பாற்பட்ட ஆழமானவொரு கருத்தை விளக்குவதாகவே காணப்படுகின்றது. பத்மபுராணத்தில் ஐயனாரின் திருவவதாரமகிமை விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் பஸ்மாசுரன் என்னும் அசுரன் கடுந்தவமியற்றி, சிவபிரானிடமிருந்து, தான் தொட்டதெல்லாம் எரிந்து சாம்பராக வேண்டும் என்ற வரத்தைப் பெற்றான். தீட்டிய மரத்திலே கூர் பார்ப்பது போல, வரம்கொடுத்த சிவனின் தலைமீது கை வைத்துப் பரீட்சிக்க முயன்றான். இந்நிலையில் சிவபிரானார் தன்நிலை உணர்ந்து, ஐவேலிக்காய் எனப்படும் சிவலிங்கக் காயில் மறைந்திருந்தார். வரம்பெற்ற பஸ்மாசுரன் உலகையே அழிக்க முற்பட்டான். இந் நிலையை உணர்ந்த காத்தற் கடவுளாகிய திருமால், அழிவினின்றும் உலகைக் காக்கும் நோக்குடன் மோகினி வடிவந்தாங்கி, அசுரனை அணுகினார்.

அசுரனும், தான் பெற்ற வரத்தைப்பற்றி மோகினியிடம் தெரிவித்தான். அதற்கு மோகினி, வரம் பெற்றால் மட்டும் போதாது, அவ்வரத்தைப் பயன்படுத்துவதற்குரிய மந்திரத்தைச் சொல்லுமுன் கரநியாசம், அங்கநியாசம் செய்ய வேண்டாமா? என்றார். அவ்வாறே பஸ்மாசுரனும், அங்கநியாசம் செய்ய முற்பட்டு, “சிரசே சுவாகா” என்று கூறித் தன்கையைத் தனது தலையிலே வைத்துக்கொண்டு பஸ்மமானான். பஸ்மாசுரன் அழிந்தபின் வெளிப்பட சிவபிரான், திருமால் மோகினி அவதாரமெடுத்து பஸ்மாசுரனை அழித்ததை அறிந்தார். இவ்வேளையில் தாருகாவனத்து முனிவர்கள் ஆணவத்தினால் செருக்குற்று வாழ்ந்து கொண்டிருந்தனர். இவர்களது செருக்கை அடக்கி, ஆணவத்தை அழித்து அருள் புரியவேண்டித் தாருகாவனத்திற்குச் சென்றனர். பிச்சாடனர் தோற்றத்தில் சிவனும், மோகினியாகத் திருமாலும் தாருகாவனத்திற்குச் சென்ற வேளையில், காலநியதியின்படி இருவருக்கும் ஐயனார் அவதரித்தார். இவ்வாறு பத்புராணத்திலே கூறப்பட்டுள்ளது.

இக்கதையே சற்று மாறுபாட்டுடன் வேறிடங்களிலே கூறப்பட்டுள்ளது. பஸ்மாசுரனை நோக்கிக் குளித்துச் சுத்தமாக வா என மோகினி கூறியதாகவும், அப்பொழுது அசுரன் எங்கு தேடியும் நீர் கிடைக்கவில்லை என்றும், அப்பொழுது மோகினி அசுரனை நோக்கி, சிறிது நீரைத் தலையில் தெளித்துக் கொண்டு வா எனக் கூறினார். அப்பொழுது அசுரன் மாட்டின் குளம்படி பதித்த இடத்தில், சிறிதளவு நீரைக் கண்டு, அதனை எடுத்துத் தன் தலைமேல் வைத்தான். அவனது கை தலைமேல்பட்டதும், தான் பெற்ற வரத்தால் அவன் எரிந்து சாம்பரானான். தன்னைத்துரத்தி வந்த அசுரனைக் காணாத சிவபிரான், திரும்பி வந்தபொழுது, திருமால் மோகினி அவதாரமெடுத்து, அவனை அழித்ததை உணர்ந்தார். அதிசௌந்தர்யம் வாய்ந்த மோகினிமீது மையல் கொண்டு, உணர்ச்சி மேலிட மோகினியாய் நின்ற மகாவிஷ்ணுவுடன் கலந்தார். அவ்வேளையில் ஐயனார் உதித்தனர் என்று வேறு சில புராணக்கதைகளிலே கூறப்பட்டுள்ளது.

கந்தப்புராணத்திலே கூறப்படுகின்ற புராணவரலாறு கீழ்க்கண்டவாறு காணப்படுகின்றது. திருமால் முதலிய தேவர்களும், அசுரர்களும் நீண்ட காலம் வாழவிரும்பிச் சாவா மருந்தைப் பெறப் பாற்கடலைக் கடைந்தனர். சிவபிரான் அருளால், அமுத கலசம் தோன்றியபோது, அதனைத் தேவர்கள் மட்டுமே பெற்று உலகிற்கு நன்மை செய்ய வேண்டும் எனக் கருதித் திருமால் மோகினி வடிவம் எடுத்தார். மோகினியின் அழகைக் கண்ட அசுரர்கள், அமுதம் பெறுவதை விடுத்து, மோகினியைச் சுற்றிவர ஆரம்பித்தனர். இவ்வேளையில் தேவர்களுக்கு அமுதளித்தபின், திருமால் மோகினி வடிவோடு அவ்விடத்தில் அமர்ந்திருந்தார். சிவபிரான் தனது நால்வகைச் சக்திகளில் திருமாலும் ஒருவர் என்பதை உலகிற்கு விளக்க, அவ்விடம் வந்து, மோகினி மீது அன்பு கொண்டு நெருங்கிய போது, “நான் ஆடவன், தாங்கள் என்னுடன் கூடுதல் முறையல்ல என்று திருமால் கூறினார்”. அப்பொழுது சிவபிரான் திருமாலை நோக்கி, “நமது சக்தி நான்குவகையான பெயர்களோடு இயங்குகின்றது. எனக்கு மனைவியாகிய போது பவானி என்றும், கோபங் கொண்டபோது காளி என்றும், போர் செய்யும்போது துர்க்கை என்றும், ஆணுரு அடையும்போது திருமால் என்றும் பெயர் பெறுவாள். ஆதலின் நீ எனக்குச் சக்தியே ஆவாய்” எனக்கூறினார். இவர்கள் ஐக்கியத்தில், கருங்கடல்போன்ற மேனியும், செவ்வானம்போன்ற சடையும், செண்டாயுதம் ஏந்திய திருக்கரமும், போற்றுதற்குரிய வீரமுங் கொண்டவராய், ஞானியர் போற்றும் பெருமையும், நன்மையே புரியுங் கருணையுங் கொண்டவராய் ஐயனார் திருவவதாரம் நிகழ்ந்தது. சிவகுமாரர்களில் இளையவராகிய பெருமையைப் பெற்று, சிவபெருமான் ஆணைப்படி, தமது அருளை தன்னை வழிபடும் பக்தர்களுக்கு வழங்கி வருவதாகக் கந்தப்புராணத்திலே கூறப்பட்டுள்ளது.

இத்தகைய புராணக்கதைகளில், சிவனுக்கும், மோகினி வடிவந் தாங்கிய திருமாலுக்கும், ஐயனார் பிள்ளையாக அவதரித்தார் என்பதே சாரமாகக் காணப்படுகின்றது. இவருடைய அவதாரம் பல கேள்விகளை மக்களிடையே எழுப்பியுள்ளது. ரிஷிமூலம், நதிமூலம் பார்க்கக்கூடாது என்ற பெரியோர் வாக்கிற்கிணங்க, காலநியதிப்படி பக்தர்களைக் காத்தருள காத்தற் கடவுளாகிய திருமாலும், சிவனும்சேர்ந்த அற்புத அவதாரமாகக் கொள்வது பொருத்தமானது. எனினும், திருமால், சிவனின் ஐக்கியத்தைத் தத்துவார்த்தமாக நோக்கின், ஐயனார் அவதாரம், சைவ வைணவ ஐக்கியத்தைப் புலப்படுத்துவதாகவே காணப்படுகின்றது. அத்தோடு பசுமாசுரன் என்ற அரக்கனின் கதை, பேராசையால் ஏற்படும் தீமை-யயும், பாத்திரமறிந்து தகுதியறிந்து எதனையும் வழங்கவேண்டும் என்பதையும் உள்ளீடாகக் கொண்டுள்ளது. மரபணுக்களின் மூலம் உயிரை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தற்கால விஞ்ஞான வெளிப்பாடுகளோடு, ஆதிகால மெஞ்ஞானரீதியான புராணவரலாறுகளை ஒப்பிடும்போது, இப் புராணக்கதைகளுள் தத்துவங்கள் மட்டுமல்ல, விஞ்ஞான உண்மைகளும் பொதிந்திருப்பதை, ஆழமாகப் புராணவரலாறுகளை நோக்குவோர் அறிந்துணர முடியும். இவ்வாறான சில விஞ்ஞான, மெஞ்ஞான உண்மைகளை ஐயனார் படைப்பு மக்களுக்கு உணர்த்திச் சமய, சமூக ஐக்கியத்திற்கு வழிகோலியுள்ளது.

- தொடரும்...

## Niro Dance Creations மற்றும் Global Tamil Cultural Organization ஆகியவை இணைந்து வழங்கிய RISE and RESIST - RARE 2023 என்னும் பல்கலாச்சார நிகழ்வு



Niro Dance Creations மற்றும் Global Tamil Cultural Organization ஆகியவை இணைந்து 12 நவம்பர் 2023 அன்று ஒரு அரிய மற்றும் அர்த்தமுள்ள நிகழ்வை in GTA - RISE and RESIST -RARE 2023 என்ற பல்கலாச்சார நிகழ்வை நடத்தின.

இந்த நிகழ்வு கனடிய பன்முக கலாச்சாரத்தை கொண்டாடியது மட்டுமின்றி, ஒரு வலுவான எதிர்ப்பையும், இனவெறி மற்றும் பாகுபாடுகளுக்கு எதிராக, கலை வெளிப்பாட்டின் மூலம் போராடியது. கலைஞர்கள் இனவெறியை நிறுத்தவும், மேலே எழவும் மற்றும் அனைத்து முரண்பாடுகளுக்கு எதிராகவும் ஒரு செய்தியை பரப்பும் வகையில் அமைந்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.


இந்த நிகழ்வானது, ஃபர்ஸ்ட் நேஷன்ஸ், இன்யூட் மற்றும் மெடிஸ் முயற்சிகளை வண்ண மக்களுடன் இணைந்து ஒரு ஸ்மட்ஜிங் விழா மூலம் அங்கீகரித்து பாராட்டியது.



50க்கும் மேற்பட்ட கலைஞர்கள் ஒரே மேடையில் தோன்றி பல நடனங்களை வழங்கினர் அவர்கள் அனைவரும். சிறுபான்மையினரின் கதைகளை முன் வாசலில் சித்தரிக்கும் கலைக் கண்காட்சி அன்றைய தினத்தின் சிறப்பம்சமாக அமைந்தது. இந்நிகழ்ச்சிக்கு அரசியல் தலைவர்கள், முக்கியஸ்தர்கள், உள்ளூர் தலைவர்கள் மற்றும் சமூக ஆதரவாளர்கமற்றும் ஊடகவியலாளர்கள் மத்தியிலிருந்து பெரும் வரவேற்பு கிடைத்தது. இந்த நிகழ்ச்சிக்கு கனடிய அரசின் ஆதரவு கிட்டியது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

As a highlight of the day, the event was very well received by dignitaries, local leaders and community supporters. The event was supported by the Government of Canada.













இங்கே பதிவு செய்யப்படும் பதிவு ஓர் காதல் கதை. இது 1985-1990 ம் இடையிலான காலகட்டத்தை சார்ந்த ஓர் கற்பனைக் கதை. இச்சிறு கதையின் மூலம் பெற்றோரிற்கான அருமையான தகவல் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. இத்தகவல் எக்காலத்திற்கும் பொருத்தமானதே. இதனை ஓர் நாடக ரூபத்தில் தருகிறேன். ஆரம்பத்தில் சிறுது சலிப்பாக இருந்தாலும் போகப்போக சுவாரஸ்யமாக இருக்கும். இதோ நீங்கள் ஆவலுடன் காத்திருக்கும்,

# "நின்னை சரணடைந்தேன்"

***(சென்ற வார தொடர்ச்சி...)***

**கதாபாத்திரம்:**

கதாநாயகன் - கணேஷ்
கதாநாயகி - மதுமிதா
கணேஷின் தந்தை - சரவணமுத்து
தாயார் - தருமவதி
மதுமிதாவின் தந்தை - வேலாயுதம்
தாயார் - சுசீலா
மதுமிதாவின் நண்பிகள் - தாரணி, வாசுகி
மதுமிதாவின் வில்லி - பொன்மதி
அதிபர் - மிஸ் சோமசுந்தரம்
கனடா மாப்பிள்ளை - பிரபா

---

**காட்சி - 12**

---

சரவணமுத்து: தம்பி ஏன் இவ்வளவு லேட்? உன்னைக் காணவில்லை எண்டு நாங்கள் யோசிச்சுக்கொண்டு இருக்கிறம்.

கணேஷ்: இல்லை அப்பா, பெடியன்களோடை கொஞ்ச நேரம் கதைச்சுக்கொண்டு நிண்டனான். அதுதான் late ஆப்போச்சு.

தருமவதி: சரி அப்பன், முகத்தைக் கழுவிப்போட்டு வந்து சாப்பிடு. அது சரி ஏன் உன்ரை முகம் வாடிக்கிடக்குது? அழுவாரைப்போல இருக்கிறாய். ஐயா, ஏதும் உடல்நிலை சரியில்லையே? இஞ்சை வா பாப்பம்.

கணேஷ்: அம்மா இப்ப எனக்கு பசிக்கேல... பிறகு சாப்பிடுறன்.

[கணேஷ் மதுமிதாவை நினைத்து நினைத்து உருகிறான். இனி எப்படி அவளை சந்திக்கப்போகிறேன் என்ற ஏக்கம் ஒருபக்கம், அவளுக்கு என்ன ஆகி இருக்கும் என்ற பயம் ஒரு பக்கம்]

---

**காட்சி - 13**

---

[ஒருநாள் மிஸ்டர் வேலாயுதம் கணேஷ் வீட்டுக்கு வருகிறார். அவர் ஏன் வருகிறார் தெரியுமா?? சம்பந்தம் செய்ய அல்ல..அவர்களை எச்சரிக்க. இருந்துதான் பார்ப்போமே!]

வேலாயுதம்: மிஸ்டர் சரவணமுத்து......மிஸ்டர் சரவணமுத்து.....

[சரவணைமுத்துவும் தருமவதியும் வெளியே வருகிறார்கள்....]

சரவணமுத்து: நீங்கள் ஆர்? உங்களுக்கு என்ன வேணும்?

வேலாயுதம்: உம்மோட ஒரு முக்கியமான விஷயம் கதைக்க வேணும்

சரவணமுத்து: கொஞ்சம் போறும் ....கொஞ்சம் போறும் ....முதல் கொஞ்சம் மரியாதையாக்கதையும். உம்மை யார் எண்டே எனக்குத் தெரியாது, அப்படி இருக்க என்னோட என்ன பிரச்சினை உமக்கு??

வேலாயுதம்: இஞ்சைபாரும் எனக்கும் உமக்கும் இடையில எந்தப் பிரச்சினையும் இல்லை.

சரவணமுத்து: அப்ப யார் எண்டு விளக்கமா சொன்னாத்தானே தெரியும்.

வேலாயுதம்: நீர் ஒரு தறுதலையை வளத்து வச்சிருக்கிறீர் எல்லே, உம்மட மகன்....அவன்தான் பிரச்சனை.

சரவணமுத்து: பொறு வாறன்....கொஞ்சம் வாயை அடக்கிப் பேசும் பாப்பம். என்ரை பிள்ளை உமக்கு என்ன செய்தவன்?

வேலாயுதம்: என்ன செய்தவனோ? உம்மட மகனை கூப்பிட்டு கேளும்.

சரவணமுத்து: தம்பி இஞ்ச உடனை வா.... இவர் ஏதோ சொல்லுறார்....அப்படி நீ என்ன செய்தனி இவருக்கு?

வேலாயுதம்: உம்மட மகன் என்ரை மகளை காதலிக்கிறான். அது அதிபருக்கு தெரிஞ்சு என்னை அவ கூப்பிட்டு ..... சரி அதை விடும். இண்டைக்கு உம்மட மகனால என்ரை குடும்ப மானம் நடுத்தெருவில நிற்குது. எப்படிப்படிச் சுக்கொண்டிருந்த பிள்ளையை இப்ப பள்ளிக்கூடம் போகாமல் மறிச்சுப்போட்டன். இனிமை மட்டும் என்ரை பிள்ளையின்ரை வாழ்க்கையில உம்மட மகன் குறுக்கிட்டானோ நான் மனுசனா இருக்க மாட்டன்.

[வேலாயுதம் கிளம்புகிறார்....]

தருமவதி: என்ரை ராசா, அந்த மனிசன் சொன்னதெல்லாம் உண்மையே? நீ ஒண்டையும் மறைக்காமல் உள்ளதை சொல்லப்பன்.

கணேஷ்: அவர் சொன்னதெல்லாம் உண்மை அம்மா. நானும் அவர் மகள் மதுவும் ஒருவரை ஒருவர் உண்மையா காதலிக்கிறம். மது நல்ல பிள்ளை அம்மா. நீங்கள்தான் எப்படியாவது எங்களை சேர்த்து வைக்க வேணும்.

தருமவதி: தம்பி நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேள்....எப்படியாவது அந்தப் பிள்ளையை மறக்கப் பார். அந்த மனிசன் சொல்லிப்போட்டு போறதை நீ கேட்டனிதானே...அந்த ஆள் ஒரு பொல்லாத ஆள் போலக்கிடக்கு. உனக்கு எதாவது நடந்தால் எங்களை உயிரோடே பாக்க மாட்டாய்.

[இப்படி இருக்க நாட்டில் அரசியல் பிரச்சனை கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பமாயிற்று. மதுவின் வாழ்க்கையில் இன்னோர் திருப்பம். அவள் பெற்றோர் மதுவுக்கு வெளிநாட்டு மாப்பிள்ளை தேடுகிறார்கள். தாரணி மூலம் இதை கணேஷ் தெரிந்து கொள்கிறான்.]

[கணேஷ் வேதனை தாங்கமுடியாது வழியேதும் இன்றி யோசித்த வண்ணம் இருக்கையில் .... அம்மா வருகிறா]

தருமவதி: தம்பி சாப்பிடையா .... இந்த ஜுசையாவது குடி அப்பன். மூண்டு நாளா நீ எதுவும் சாப்பிடாமல் இருக்கிறாய். என்ரை செல்லமெல்லே ....அம்மான்ரை சொல்லைக்கேள். உதெல்லாம் எங்களுக்கு சரிவராது. நான் உனக்கு நல்ல இடத்தில ஒரு பிள்ளையை பாத்து கட்டித்தாறன்.

சரவணமுத்து: தம்பி அம்மா சொல்லுறதைக்கேள் ..... எல்லாம் நல்லபடியா நடக்கும்.

[மூவரும் கிளம்பி செல்கிறார்கள் ....]

---

**காட்சி - 14**

---

[இப்படி இருக்க கனடாவில் இருந்து ஓர் எஞ்சினியர் மாப்பிளையை மதுவுக்கு பேசி முடித்தார்கள். பெயர் பிரபா.... காசைக்குடுத்து மாப்பிளையை வாங்கி விட்டார் வேலாயுதம். இங்கே என்ன நடக்கப்போகிறது என்று இருந்துதான் பார்ப்போமே!]

[பிரபா ஒரு பக்க போனில் ..... வேலாயுதம் மறு பக்க போனில் .....]

பிரபா: அங்கிள் நான் கனடால இருந்து பிரபா கதைக்கிறேன். எப்படி இருக்கிறீங்க அங்கிள்? ஆன்ரி மது எல்லாரும் எப்படி இருக்காங்க?

வேலாயுதம்: நாங்கள் எல்லாரும் நல்ல சுகமா இருக்கிறம். அது சரி ஸ்பான்சர் அலுவல் எல்லாம் எப்படி தம்பி? எந்த மட்டில கிடக்குது? இங்க இப்ப நாட்டு நிலைமை சரியான மோசமாய் போய்க்கொண்டு இருக்கு.

பிரபா: டோன்ட் வொரி அங்கிள் .... நான் எல்லா டொக்கிமெண்டும் அனுப்பிட்டன். மது கெதியில கனடா வந்திடுவா அங்கிள். பாய்....

[நாட்கள் நகர்ந்தன வேலாயுதம் குடும்பம் sponsor இன் பதிலைக் காத்த வண்ணம் இருந்தது. மதுமிதா மனம் பெற்றோரின் வற்புறுத்தலால் மாற்றப்பட்டது. இருந்தும் அவளால் கணேஷை முற்றுமுழுதாக மறக்க முடியவில்லை. இன்னும் சிறிது காலம் கழித்து......]

பிரபா: ஹலோ .....ஹலோ ......அங்கிள் நான் பிரபா கதைக்கிறேன். ஒரு குட் நியூஸ் அங்கிள். மதுவின் ஸ்பான்ஸர்ஷிப் சரி வந்திட்டு அங்கிள். இந்த ஹப்பினெஸ்ஸை நான் மதுவோடை ஷெயார் பண்ண வேணும். மதுவிடம் போனை ஒருக்கா குடுங்கோ அங்கிள்.

பிரபா: ஹலோ .....மது ஹவ் ஆர் யு? எப்படி இருக்கிறீங்க? ஒரு குட் நியூஸ்....நீங்கள் கனடா வார எல்லா அலுவலையும் செய்யலாம். எல்லாம் சக்சஸ்! மது ஏன் ஒன்றுமே பேசாம இருக்கிறீங்க? உங்களுக்கு கனடா வர்றது ஹாப்பியா இல்லையா?

மது: சந்தோஷம்தான்...ஆனா அம்மா அப்பா நண்பிகள் இந்த ஊர் எல்லாத்தையும் விட்டிட்டு வாறத நினைக்கத்தான் கவலையா இருக்கு.

பிரபா: நீங்க ஒண்டுக்கும் கவலைப்பட வேண்டாம். கனடா வந்தீங்க பிறகு திரும்பிப்போகவே மாட்டிங்க. நான் உங்களை அவ்வளவு ஹாப்பியா வைச்சிருப்பன்.

மது: சரி நான் பிறகு கதைக்கிறேன்

[பயண ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன...மது ஊரையும் உறவுகளையும் பிரிந்து செல்லும் நாளும் வந்தது. சூட்கேஸை கையில் எடுத்தவண்ணம் செல்கிறாள்...பெற்றோர்கள் கூடவே செல்கிறார்கள். தாரணியும் வாசுகியும் வழி அனுப்பி வைக்கிறார்கள்.]

***(தொடரும்...)***

**நன்றி!**

**அன்புடன் திருமகள், ரமேஷ்**

---

# முத்துப்பற் சிரிப்பு
## (நிலைமண்டில ஆசிரியப்பா)

---

முத்தாச்சி வயிற்று மூன்றாம் பேத்திக்கு
தெத்துப்பல் இரண்டு தெளிவாய்த் தெரியுதே!
சத்தம் இன்றித் தனியே சிரிப்பினும்
முத்துப்பற் சிரிப்பு முழுசாய்த் தெரியுமே!
கந்தையா வாத்தியின் கடைசி மகளும்
தந்தையைப் போலவே தனிக்கறுப் பென்றாலும்
சொந்தமாய்ச் சிரிப்பொன்று சொத்தாய் வைத்திருப்பாள்
எந்தவிலைக்கும் எவர்க்கும் தராளே!
பெத்தாச்சி பலமுறை வெற்றிலை போடுவார்
பத்தாமல் புகையிலை பதமாய்ச் சேர்ப்பார்
முத்தாய் மின்னும் முன்வாய்ப் பற்கள்
செத்தும் மாறாத் தந்தச் சிரிப்பு
சுந்தரம் தினமும் சுருட்டுப் பிடிப்பார்
தந்தம் போலவே தங்கப் பற்கள்
மந்திரம் ஏதும் மறைவாய்ச் செய்வரோ?
அந்தச் சிரிப்பு அவர்க்கே சொந்தம்
தானும் நடந்து தன்நடை கெட்டதுபோல்
நானும் தினமும் நாலுமுறை பல்துலக்கி
முத்துச் சிரிப்பு முகத்தில் வருமென
பத்துபல் போனது பலனொன்று மில்லையே!

---

**ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
*416) 844-7453*

# நகராட்சி நிர்வாகத்துறையின் 2534 பணிகளை டிஎன்பிஎஸ்சி மூலம் நிரப்பிடுக: தமிழக அரசுக்கு ராமதாஸ் வலியுறுத்தல்



இந்திய செய்திகள்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்த வேண்டிய போட்டித் தேர்வை நகராட்சி நிர்வாகத் துறையே நடத்துவதற்கு எந்த நியாயமான காரணங்களும் இல்லை. டிஎன்பிஎஸ்சியை ஒதுக்கி வைத்து விட்டு, அனுபவமே இல்லாத அண்ணா பல்கலைக்கழகம் மூலம் பணியாளர்களை தேர்ந்தெடுக்க நகராட்சி நிர்வாகம் துடிக்கிறது என்றால், அதில் ஏதோ உள்நோக்கம் இருப்பதாகத் தான் தோன்றுகிறது'', என்று பாமக நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழகத்தில் நகராட்சி நிர்வாகத்துறையில் உள்ள 2534 தொடக்க நிலை பணிகளை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக அல்லாமல், நகராட்சி நிர்வாகத்துறை மூலமாக நேரடியாக தேந்தெடுக்க தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது. எந்த நோக்கத்துக்காக உள்ளாட்சிகள், பொதுத்துறை அமைப்புகளின் பணியாளர்களை டிஎன்பிஎஸ்சி மூலம் தேர்ந்தெடுக்க முடிவு செய்யப்பட்டதோ, அதற்கு எதிராக தமிழக அரசு மேற்கொண்டுள்ள இந்த நிலைப்பாடு முறைகேடுகள் நடப்பதற்கே வழிவகுக்கும்.நகராட்சி நிர்வாகத்துறையின் கீழ் செயல்பட்டுவரும் 20 மாநகராட்சிகள் மற்றும் 138 நகராட்சிகளில் 2534 தொடக்க நிலை பணியிடங்கள் காலியாக உள்ளன. இவை அனைத்தும் டிஎன்பிஎஸ்சி எனப்படும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பப்பட வேண்டும்.

ஆனால், அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளாமல், நகராட்சி நிர்வாகமே, சென்னை அண்ணா பல்கலைக்கழகம் மூலம் எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு நடத்தி தேர்ந்தெடுக்க முடிவு செய்திருக்கிறது. அதற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை கடந்த 14ம் நாள் வெளியிடப்பட்டுள்ளது.தமிழக அரசின் இந்த முடிவு முற்றிலும் தவறானது. தமிழகத்தில் பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள சில குறிப்பிட்ட வகை பணியாளர்களை அந்தந்த நிறுவனங்களே தேர்ந்தெடுக்கும் நடைமுறை தான் இருந்து வந்தது. ஆனால், இத்தகைய நடைமுறையில் ஊழல்கள் நடைபெற வாய்ப்புகள் இருப்பதாகக் கூறி, இனிவரும் காலங்களில் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், மின்சார வாரியம் உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றின் பணியாளர்களும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாகவே தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று தமிழக அரசு அறிவித்தது.

அதற்கான சட்டமும் கடந்த 2021 டிசம்பர் மாதத்தில் நிறைவேற்றப்பட்டது.உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களை, அந்த அமைப்புகளே தேர்ந்தெடுத்தால் நியாயமாக இருக்காது; ஊழல்களும், முறைகேடுகளும் நடைபெறலாம் என்பதால் தான், அவர்களை போட்டித் தேர்வுகள் மூலம் தேர்வு செய்யும் பொறுப்பு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துக்கு மாற்றப்பட்டது. ஆனால், இப்போது அந்தப் பொறுப்பு மீண்டும் உள்ளாட்சி அமைப்புகளுக்கே வழங்கப்பட்டிருக்கிறது என்றால், அதன் நோக்கம், தமிழக அரசு ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, ஊழல் செய்வதைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்? மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் பணியாளர்களை நகராட்சி நிர்வாகத்துறையே தேர்வு செய்யும் போது, அதில் முறைகேடுகள் நடக்கக்கூடும் என்று நம்புவதற்கு பல காரணங்கள் உள்ளன..

நகராட்சி நிர்வாகத்துறைக்கு அண்ணா பல்கலைக்கழகத்தின் வாயிலாக தேர்ந்தெடுக்கப் படவிருக்கும் 2534 பேரும் தொடக்க நிலை பணியாளர்கள் ஆவர். டிஎன்பிஎஸ்சி மூலம் பணியாளர்களை தேர்ந்தெடுக்கும் போது முதல் தொகுதி பணிகளுக்கும், இரண்டாம் தொகுதி பணிகளுக்கும் மட்டுமே நேர்முகத்தேர்வு நடத்தப்படும். தொடக்க நிலை பணிகளுக்கு நேர்முகத்தேர்வு நடத்தப்படாது. அந்த வழக்கத்துக்கு மாறாக நகராட்சி நிர்வாகத்துறை தொடக்க நிலை பணிகளுக்கு நேர்முகத் தேர்வுகள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதன் நோக்கமே, அதில் ஆட்சியாளர்களுக்கு வேண்டியவர்களுக்கு அதிக மதிப்பெண்களை வழங்கி, அவர்களின் தேர்ச்சியை உறுதி செய்வது தான். இதை எவரும் மறுக்க முடியாது.மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கான பணியாளர்களை தாங்களே நேரடியாக தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதில், நகராட்சி நிர்வாகத்துறை காட்டும் ஆர்வமும், துடிப்பும் இதை உறுதி செய்கிறது.

நகராட்சி நிர்வாகத்துறை பணியாளர்களை நேரடியாக தேர்ந்தெடுப்பதற்கான அரசாணை கடந்த நவம்பர் 14ம் நாள் தான் வெளியிடப்பட்டது. அதனடிப்படையிலான அடுத்தக்கட்ட பணிகள், அதற்குப் பிறகு தான் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால், அரசாணை வெளியிடப்படுவதற்கு முன்பாகவே, அக்டோபர் 3ம் நாள் நகராட்சி நிர்வாகத்துறை இயக்குனர் சிவராசு முன்னிலையில் நடைபெற்ற நகராட்சி நிர்வாகத் துறை கூட்டத்தில் போட்டித் தேர்வுகளுக்கான பாடத்திட்டத்தை தீர்மானிக்க குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அரசாணைக்கு முன்பே நகராட்சி நிர்வாகம் இந்த விஷயத்தில் அவசரம் காட்ட வேண்டியத் தேவை என்ன?தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்த வேண்டிய போட்டித் தேர்வை நகராட்சி நிர்வாகத் துறையே நடத்துவதற்கு எந்த நியாயமான காரணங்களும் இல்லை.

அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆண்டுக்கு 10 ஆயிரம் பணியாளர்களைக் கூட தேர்ந்தெடுப்பதில்லை; அதனால், அதற்கு பணிச்சுமை கிடையாது. அதற்கெல்லாம் மேலாக, அண்ணா பல்கலைக்கழகம் என்பது ஒரு கல்வி நிறுவனம். அரசு ஊழியர்களை போட்டித்தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கும் கட்டமைப்போ, அனுபவமோ அண்ணா பல்கலைக்கழகத்துக்கு கிடையாது. அவ்வாறு இருக்கும் போது, டிஎன்பிஎஸ்சியை ஒதுக்கி வைத்து விட்டு, அனுபவமே இல்லாத அண்ணா பல்கலைக்கழகம் மூலம் பணியாளர்களை தேர்ந்தெடுக்க நகராட்சி நிர்வாகம் துடிக்கிறது என்றால், அதில் ஏதோ உள்நோக்கம் இருப்பதாகத் தான் தோன்றுகிறது.அரசுத்துறை, பொதுத்துறை மற்றும் உள்ளாட்சிகளில் வேலைவாய்ப்புகள் வெகுவாக குறைந்து விட்ட நிலையில், அப்பணிகளுக்கான ஆள்தேர்வு நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்தப்பட்டு, தகுதியான தேர்வர்களுக்கு வேலை வழங்கப்பட வேண்டும். அதன்படி, நகராட்சி நிர்வாகத்துறைக்கு 2534 பேரை தேர்வு செய்வதற்கான போட்டித்தேர்வை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாகவே நடத்த வேண்டும். இந்த பணிகளுக்கு நேர்முகத் தேர்வு நடத்தக்கூடாது'' என்று வலியுறுத்தியுள்ளார்.

# 30 குண்டுகள் முழங்க தமிழக அரசு மரியாதையுடன் மார்க்சிஸ்ட் தலைவர் சங்கரய்யா உடல் தகனம்

தமிழக அரசு மரியாதையுடன் 30 குண்டுகள் முழங்க, மார்க்சிஸ்ட் முதுபெரும் தலைவர் சங்கரய்யா உடல் தகனம் செய்யப்பட்டது. கட்சியின் மூத்த தலைவர்கள் சீதாராம் யெச்சூரி, பிரகாஷ் காரத்,ஜி. ராமகிருஷ்ணன், கே.பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் வீரவணக்கம் செலுத்தினர்.சுதந்திரப் போராட்ட வீரரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவருமான என்.சங்கரய்யா தனது 102வது வயதில் சென்னையில் நேற்று முன்தினம் காலமானார்.

முதல்வர் ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் மருத்துவமனைக்கு சென்று அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.பின்னர்,குரோம்பேட்டையில் உள்ள இல்லம் மற்றும் தியாகராய நகரில் உள்ள கட்சி அலுவலகத்தில் அவரது உடல் வைக்கப்பட்டது. இந்நிலையில், நேற்று கட்சி அலுவலகத்தில் சங்கரய்யா உடலுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி, அரசியல் தலைமைக் குழு உறுப்பினர்கள் பிரகாஷ் காரத், அசோக் தவாலே, ஜி.ராமகிருஷ்ணன், மத்திய குழு உறுப்பினர் உ.வாசுகி,மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன்,



அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், சேகர்பாபு, திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, விசிக தலைவர் திருமாவளவன், நாம் தமிழர் ஒருங்கிணைப்பாளர் சீமான், திமுக எம்.பி. ஆ.ராசா, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, 'இந்து' என்.ராம், சென்னைமாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன், நடிகர்கள் சத்யராஜ், பார்த்திபன் உட்பட ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர்.

காலை 10 மணி அளவில் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் சங்கரய்யா உடல் பெசன்ட் நகர் மின் மயானத்துக்கு ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது. வழிநெடுகிலும் பொதுமக்கள், சங்கரய்யா உடலுக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். மார்க்சிஸ்ட் கட்சியினர் செங்கொடி ஏந்திபேரணியாக நடந்து வந்தனர். கே.பாலகிருஷ்ணன், ஜி.ராமகிருஷ்ணன், 'இந்து' என்.ராம் உள்ளிட்டோரும் உடன் நடந்து வந்தனர்.

பிற்பகல் 12 மணி அளவில் இறுதி ஊர்வலம் பெசன்ட் நகர் மின் மயானத்தை அடைந்தது. அங்கு, சங்கரய்யா உடலுக்கு குடும்பத்தினர் சார்பில் இறுதிச் சடங்குகள் செய்யப்பட்டன. கட்சியின் மூத்த தலைவர்கள் சீதாராம் யெச்சூரி, பிரகாஷ் காரத், அசோக் தவாலே, கேரள மாநிலச் செயலாளர் கோவிந்தன், மேற்கு வங்க மாநிலச் செயலாளர் முகமது சலீம், அகில இந்திய மாதர் சங்கத் தலைவர் பிமதி உள்ளிட்டோர் வீரவணக்கம் செலுத்தினர். அங்கு நடந்த இரங்கல் கூட்டத்தில் சீதாராம் யெச்சூரி பேசும்போது, ''சங்கரய்யா காட்டிய வழியில் இறுதி வரை பயணிப்போம்'' என்றார். இதைத் தொடர்ந்து, 30 குண்டுகள் முழங்க, தமிழக அரசு சார்பில் சங்கரய்யா உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தப்பட்டு, அவரது உடல் தகனம் செய்யப்பட்டது.

# “இலங்கை கிரிக்கெட்டை சீரழிப்பதே ஜெய் ஷா தான்” அர்ஜுன ரணதுங்கா பரபரப்பு குற்றச்சாட்டு

இலங்கை கிரிக்கெட் வாரியத்தை நடத்துவது ஜெய் ஷா என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் அர்ஜுன ரணதுங்கா பரபரப்பு குற்றம் சாட்டியுள்ளார்.நடப்பு உலகக் கோப்பை தொடரில் இலங்கை அணி மோசமான தோல்வியை தழுவி வெளியேறியது. விளையாடிய 9 போட்டிகளில் 2 போட்டிகளில் மட்டுமே வெற்றிபெற்றது. இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் 55 ரன்களுக்கு சுருண்ட இலங்கை, 302 ரன்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது.

இந்த தோல்விக்கு பின்பு கடுமையான விமர்சனங்களை தாண்டி, இலங்கை கிரிக்கெட் வாரியத்தில் பிரச்சினைகள் வெடித்துள்ளன.கடந்த சில தினங்களுக்கு முன்னர் இலங்கை கிரிக்கெட் வாரியத்தை கலைத்து விட்டதாக அந்நாட்டு அரசு அறிவித்தது. அணியின் நிர்வாக பணிகளை கவனிக்க இலங்கைக்கு உலகக் கோப்பையை வென்று கொடுத்த முன்னாள் கேப்டன் அர்ஜுன ரணதுங்கா தலைமையில் ஏழு பேர் அடங்கிய இடைக்கால குழு ஒன்றையும் அரசு நியமித்தது. இந்த அறிவிப்பை அந்த நாட்டின் விளையாட்டு துறை முறைப்படி வெளியிட்டது.

இந்தச் சூழலில் இலங்கை அணியை இடைநீக்கம் செய்துள்ளது ஐசிசி. "ஐசிசியின் முழு நேர உறுப்பினரான இலங்கை கிரிக்கெட் வாரியம் விதிகளை மீறி இயங்குவதாக தெரிகிறது. அதனால் கிரிக்க வாரியத்தை இடைநீக்கம் செய்துள்ளோம். இன்று நடைபெற்ற கூட்டத்தில் இதை தீர்மானித்தோம். இலங்கை கிரிக்கெட் வாரியத்தின் விவகாரங்கள் தன்னாட்சி முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும். மேலும், அரசாங்கத்தின் தலையீடு இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது'' என ஐசிசி தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் அடங்குவதற்குள்ளாகவே தற்போது புதிய பரபரப்பை கிளப்பி இருக்கிறார் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் அர்ஜுன ரணதுங்கா. இந்திய கிரிக்கெட் வாரியத்தின் செயலாளரான ஜெய் ஷா தொடர்பாக அர்ஜுன ரணதுங்கா குற்றச்சாட்டுகளைத் தெரிவித்துள்ளார்.

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · CONSTRUCTION · VACANT LAND




## Contact Me Today

**NESAN** Subramaniam **416-908-5656**



## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit • Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RightBroker = RightMortgage
Brokerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவகையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524




26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

உதயம் 1441 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday November 17, 2023

# 50ம் ஆண்டில் கால்பதிக்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கிளை அமெரிக்காவில் உதயமாகின்றது

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
INTERNATIONAL MOVEMENT FOR TAMIL CULTURE

1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பெற்றதும் எதிர்வரும் 2024ம் ஆண்டில் தனது 50ம் ஆண்டில் கால்பதிக்கும் உலகின் பல நாடுகளிலும் கிளைகளைக் கொண்டு இயங்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கிளை அமெரிக்காவில் உதயமாகின்றது என்னும் நற்செய்தியை இங்கு பதிவு செய்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைமைச் செயலகம் கனடாவில் இயங்கிவருகின்றது. இந்த நீண்ட கால வரலாற்றைக் கொண்ட இயக்கத்திற்கான உத்தியோகபூர்வ பதிவு கனடிய மத்திய அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பெற்றுள்ளது.

தலைமையக செயற்பாட்டுக்குழுவின் தலைவராக கனடாவாழ் வினாசித்தம்பி துரைராஜா அவர்களும் செயலாளர் நாயகமாக ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்களும் வடஅமெரிக்க நாடுகளுக்கான சிரேஸ்ட உப தலைவராக கனடா வாழ் சிவா கணபதிப்பிள்ளை அவர்களும் அகிலக் கிளைகளின் ஒருங்கிணைப்பாளர் ஜேர்மனி வாழ் இ. ராஜசூரியர் அவர்களும் கொள்கை பரப்புச் செயலாளராக கனடா வாழ் நடா ராஜ்குமார் அவர்களும் நிர்வாகச் செயலாளராக ஜேர்மனி வாழ் கிரேசன் ஜேம்ஸ்ரன் அவர்களும் அனைத்துலக ஊடகப் பொறுப்பாளராக கனடா வாழ் லோகன் லோகேந்திரலிங்கம் அவர்களும் தொடர்ச்சியாகப் பணியாற்றி வருகின்றார்கள்.



(உள்ளே தொடர்ச்சி 9ம் பக்கத்தில்)

# தமது குற்றச்சாட்டை அரசால் நிரூபிக்க முடியாத நிலையில் இலங்கையில் மூன்று தமிழர்கள் விடுதலை



இலங்கையில் பணிபுரிந்த வெளிநாட்டு இராஜதந்திரி ஒருவரைக் கொலை செய்ய சதித் திட்டம் தீட்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டு 15 வருடங்களுக்கும் மேலாக தடுப்புக்காவலில் இருந்த மூன்று தமிழீழ விடுதலைப் புலி சந்தேக நபர்கள் குற்றச்சாட்டை நிரூபிக்க முடியாத நிலையில் கடந்த வாரம் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

யோகராஜா நிரோஜன், சுப்பிரமணியம் சுரேந்திரராஜா மற்றும் கனகரத்தினம் ஆதித்யன் ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் அவர்களை விடுதலை செய்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மகேன் வீரமன் உத்தரவிட்டுள்ளார்.

(உள்ளே தொடர்ச்சி 15ம் பக்கத்தில்)

# அவுஸ்திரேலியா வாழ் கலைஞர்களின் நம்மவர் தயாரிப்பான "யாதும் யாவரும்

மீண்டும் நம்மவர் திரைப்படம் ஒன்று எதிர்வரும் 18-11-2023 சனிக்கிழமை மற்றும் 19-11-2023 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் கனடாவின் ஸ்காபுறோ நகரில் மெக்கோவான்ஹீ பின்ச் சந்திப்பு அருகில் உள்ள வுட்சைட் சினிமாவில் நம் தமிழ் மண்ணின் தயாரிப்பாய் திரையிடப்படுகின்றது ..

அண்மையில் 'பாலை நிலம்' திரைப்படத்தை கண்டு களித்து ஆதரவு வழங்கிய எமது கனடா திரைப்பட ரசிகர்கள் இந்த "யாதும் யாவரும்" என்னும் நம்மவர் திரைப்படத்திற்கும் தங்கள் ஆதரவை வழங்க வேண்டும்.

2023 பெப்பிரவரி மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று பி.ப 1.30 இற்கு கனடா திரையரங்குகளில் திரையிடப்படவுள்ளது.

இந்த 'யாதும் யாவரும்' திரைப்படத்தை இயக்கி தயாரித்துள்ள மருத்துவர் ஜெயமோகன் அவர்களே ஏற்கெளவே அவுஸ்த்திரேலியாவில் தயாரிக்கப்பெற்ற 'பொய்மான்' திரைப்படம் திரைக்கு வந்த போது அவுஸ்திரேலிய திரையரங்குகளில் அரங்கம் நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்பட்டு சிறந்த விமர்சனங்களையும் பெற்றது என்பதும் தொடர்ந்து கனடாவில் 2023 பெப்பிரவரி மாதம் 19ம் திகதி திரையிடப்பட்டபோது திரையரங்கு நிறைந்த ரசிகர்கள் அதனை கண்டு களித்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

.தற்போது திரையிடப்படவுள்ள யாதும் யாவரும்' திரைப்படத்தில் அவுஸ்த்திரேலியா வாழ் நமது கலைஞர்களும் இதில் நடித்தும் ஏனைய வழிகளில் பங்கெடுத்தும் உள்ளார்கள். அற்புதமான குடும்பக் கதை கொண்ட இந்த திரைப்படத்தைக் காணவாருங்கள் அனுமதிச் சீட்டுக்களுக்கு சிவர்-416 771 8681 அல்லது 416 771 9286





# தமிழகத்திற்கு அகதியாக சென்று மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பியவர்களை கைது செய்து விளக்கமறியலுக்கு அனுப்பிய பருத்தித்துறை நீதிமன்றம்

தமிழ்நாட்டில் அகதிகளாக தஞ்சமடைந்து 33 ஆண்டுகளின் பின்னர் சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக தாயகம் திரும்பிய வடமராட்சி கிழக்கு, குடத்தனையை சேர்ந்த மூவரின் விளக்கமறியலை பருத்தித்துறை நீதிவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை நீடித்து உத்தரவிட்டுள்ளார்.

(உள்ளே செய்தி 17ம் பக்கத்தில்)

# பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபாவின் 98வது ஜனன தினம் கனடாவிலும் கொண்டாடப்படவுள்ளது

கனடாவாழ் சாயி அன்பர்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்களுக்கும் மனித நேய உதவிகளை வழங்கி வருகின்றார்கள்.




பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபாவின் 98வது பிறந்த தினம் வெகு விமரிசையாக உலகம் எங்கும் நவம்பர் மாதம் 23ம் திகதி வியாழக்கிழமை கொண்டாடப்படுகின்றது. கனடா ஸ்காபுரோவில் அமைந்துள்ள சத்திய சாயிபாபா நிலையத்திலும் காலை 5.00 மணி முதல் 7.00 மணி வரையும் மாலை 6.00 மணி முதல் 8.30 மணி வரையும் விசேட நிகழ்ச்சிகள் நடைபெறும்.

(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)

